Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12956)

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி-30 | 16-10-2005 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை-241

## யுத்தநிறுத்தத்தைக் காக்க நாம் தீவிரமாக முயலும் போதும்

# யுத்தநிறுத்தத்தை சீர்குலைக்கவே சிறிலங்கா அரசு விரும்புகின்றது!

## யு.நி.க.குழுவிற்கு சு.ப.தமிழ்ச்செல்வன் கடிதம்

(கிளிநொச்சி )

**போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாகப் பாதுகாக்க நாம் எவ்வாறு கடுமையாகப் பாடுபட்டாலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் சமாதான நடவடிக்கைகளையும் சீர்குலைக்கும் நோக்குடன் நிலைமைகளை சிறிலங்கா அரசு கையாளுகின்றது என்பதையே அண்மைக்காலச் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

தமிழர் தாயகத்தில் சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வரும் வன்முறைகள் குறித்து இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் கடிதம் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் அவர் தெரிவித் துள்ளதாவது, மட்டக்களப்பு வவுணதீவில் கேணல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர்கள் கொலையைக் கண்டித்து திருமலையில் புறக்கணிப்புப் போராட்டம்

யாழ். பாடசாலைகளின் இரு அதிபர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து திருகோணமலையில் பாடசாலைகளில் புறக்கணிப்புப் போராட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கானஅழைப்பைதிருகோணமலை தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ளது. இந்தக் கொலைகள் ஆசிரிய சமூகத்திற்கு விடுக்கப்பட்டுள்ள மிகப்பெரிய அச்சுறுத்தல்.இத்தகைய கொலைகளை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. எனவே அச்செயல்களைக் கண்டித்து திருகோணமலை மாவட்டத்தின் சகல பாடசாலைகளையும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அன்று மூடி ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலைகளை முற்றாகப் புறக்கணித்து எமது கண்டனத்தையும் துயரையும் வெளிப்படுத்துவோம்.

அன்று சகலகேளிக்கை நிகழ்வுகளையும் தவிர்க்குமாறும் வேண்டுகின்றோம் என்று அந்த அழைப்பில் கூறப்பட்டுள்ளது.

## போர் ஏற்படக் கூடிய அபாயச்சூழல் நிலவுகிறது டொன்ட்புறூவ் ஹொவ்டே எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில்போர் ஏற்படும் அபாயச் சூழல் நிலவுவதாக நோர்வேயின் விசேடதூதுவரும் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முன்னாள் தலைவருமான டொன்ட் புறூட் ஹொவ்டே எச்சரித்துள்ளார்.

சிறிலங்காவில்வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் நேற்றுமுன்தினம் இரவு டொன்ட்புறூவ் ஹொவ்டே கூறியதாவது இலங்கையில் போர்ச் சூழல்ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.இது ஒரு அபாய எச்சரிக்கை. முழுஅளவிலான போருக்கான எச்சரிக்கை நாட்டின் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு இது பேராபத்து. இலங்கையில்தற்போது இடம்பெற்று வரும் கொலைகள் மிகவும் அபாயகரமான நிலை யினை தோற்றுவிக்கக் கூடியவை என்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் அமைதிப்பேச்சு ஆரம்பிக்கும் வரை இயன்மார்ட்டினின் யோசனை நிராகரிப்பு

### -கூட்டமைப்பு பா.உ ஜோசப் பரராஜசிங்கம்

(திருமலை)

அமைதிப்பேச்சுக்கள்மீண்டும் நடைபெறும் வரை சர்வதேச மனிதஉரிமைச்செயற்பாட்டாளர் இயன்மார்ட்டின் முன்வைத்த மனிதஉரிமை மீறலுக்கான கண்காணிப்புக்குழு யோசனையை நிராகரிப்பதாக தமிழ்தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இயன் மார்ட்டினை தமிழ்தேசியக் கூட்டமைப்பினர் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பு குறித்து தமிழ்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் கூறுகையில், சர்வதேச மனிதஉரிமை செயற்பாட்டாளர் இயன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மீண்டும் நீடிப்பு?

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலுடன் நேரடியாக தொடர்புபடும் பிரிவுகளை அகற்றிவிட்டு அவசரகாலச் சட்டத்தைக் தொடர்வதற்கு சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இம்மாதத்துடன் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கே அரசாங்கம் முதலில் திட்டமிட்டிருந்தது. லண்டன் பயணமாவதற்கு முன்னர் பாதுகாப்பமைச்சர் என்ற வகையில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரிடமும் பாதுகாப்பமைச்சின் செயலாளரிடமும் நாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்த அறிக்கையைச் சந்திரிகா கேட்டுள்ளார்.

அரசியல்கட்சிகளின் தலைவர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்ததால் அவசரகாலச் சட்டத்தை நீடிக்க சந்திரிகா ஒப்புதல் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

## தமிழ் மக்களது வாழ்வுரிமைக்காக போராடும் தமிழ்பற்றாளர் மீதான தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும்

### -யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

தமிழரது வாழ்வுரிமைக்காக போராடும் தமிழ்ப் பற்றாளர்கள் மீது தாக்குதல் நடத்துவது நிறுத்தப்பட வேண்டுமென யாழ்.மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இருபத்து நான்கு மணித்தியால இடைவெளிக்குள் இரண்டு கல்விமான்கள் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதை யாழ்ப்பாண மாவட்டபொது அமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக்கண்டிக்கிறது.

இவ்வாறான கொலைகள் மூலம் எதையும் சாதிக்கப் போவதில்லை இவ்வாறான கொலைகளுக்கு படையினரே காரணம் போர் நிறுத்தம் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன இதுபோன்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தமிழ் தேசிய எழுச்சிநாள்: சிறப்புற நடாத்துவதற்கு ஏற்பாடு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் எதிர்வரும் சனிக்கிழமை தமிழ்தேசிய எழுச்சி நாள் நிகழ்வை சிறப்பாக நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தமிழ்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன் மற்றும் க. துரைரெட்ணசிங்கம் ஆகியோர் நேற்று மாலை திருகோணமலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற எழுச்சி விழிப்புணர்வுக் கருத்தரங்கில் பேசும் போது தெரிவித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தன், துரைரெட்ணசிங்கம் ஆகியோரின் பெயர்களைச் சம்பந்தப்படுத்தி அரசசார்பான ஊடகங்கள் வெளியிட்ட விஷமத்தனமான செய்திகளுக்கு மத்தியில் அவர்கள் இருவரும் இக்கூட்டத்தில் பங்குபற்றிப்பேசினர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தைக்கான இடம் குறித்து அரசாங்கத்துடன் ஹொவ்டே ஆலோசனை

(கொழும்பு)

யுத்த நிறுத்தத்தைப் பேணிப்பாதுகாக்கும் வகையிலும், படு கொலைகளைத் தடுத்து நிறுத்தும் முகமாகவும், அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நேரடிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான இடத்தைத் தெரிவுசெய்வது குறித்து இலங்கை வந்துள்ள யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவரும், நோர்வேயின் விசேட தூதுவருமான டொன்ட் புறூவ் ஹொவ்டே சமாதான [illegible] செயலகத்துடன் பேச்சு நடத்தி வருகிறார் என நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு**

இயந்திரத்தில் செய்த சீமெந்து கல் சிவா பொறியியற் தொழில கம் 4 ஆம் கட்டை அம்பாள்புரம் வன்னி விளாங்குளத்தில் (மாங்குளம்) விற் பனைக்குண்டு.

அளவுகளும் விலையும்.
5"x6"x12"=25.00
4"x6"x14"=23.00

(6841)

**SAAMSTECH இன் முக்கிய அறிவித்தல்**

17 ஆம் திகதி நடைபெற இருந்த இலவச நேரடி ஆங்கில வகுப்பு 22 ஆம் திகதி நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். 841,Hospital RD Jaffna 0214591571 (5395)

**10 நிமிடத்தில் படங்கள்!!!**

அவசர தேவைக்கான பாஸ் மற் றும் சகல அடையாள அட்டைப் படங் களையும் உடன் வழங்குகின்றோம். டிஜிற்றல் அல்பம்,டியுறோ பிறேம், சகல லமினேசன் வேலைகளுக்கும்!!! (காலை 7.30 மணி தொடக்கம் எமது சேவையினைப் பெற்றுக்கொள் ளுங்கள்)யாழ்ஒளி K.S.R. PHOTOS) இல.05 கனகபுரம் தெரு, கிளிநொச்சி, (பேருந்து நிலையம் ,சந்தை அரு காமை). (6802)

**விற்பனைக்குண்டு**

லைட் இன்ஜின் ஒரிஜினல் ஜப் பான் 2700 K.N. மண்ணெண்ணை யில் இயங்கக் கூடியதும், மற்றும் மோட்டார் சைக்கிள் (YAMAHA V50) ஒன் றும் விற்பனைக்குண்டு. தொடர்பு க்கு த.யோகேஸ், 154 ஆம் கட்டை, செல்வபுரம், முறிகண்டி (சேச்சடி) 6850)


**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**கணனிப் பயிற்சி நிலையம்**
**கிளிநொச்சிக் கிளை**

SRI LANKA RED CROSS SOCIETY

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

**Diploma In office Management**
*Duration:- 05 Months*

**Diploma In Desktop Publishing**
*Duration:- 05 Months*

**Diploma In Multimedia Graphics**
*Duration:- 05 Months*

**Diploma In Hardware Engineering**
*Duration:- 03 Months*

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை
விண்ணப்பங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
விண்ணப்ப முடிவுத் திகதி:- 18.10.2005

(சி. 13063)
தொடர்புகளுக்கு: கணனிப்பிரிவு
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
கிளிநொச்சி


## 2005/2006 பெரும் போக பயிர்ச்செய்கை பாரிய நீர்ப்பாசன குளங்கள்

# கால அட்டவணை

1951 ஆம்ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தாலும், 1968 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தாலும், திருத்தப்பட்ட 1940 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், 2005/2006 ஆண்டிற்கான பெரும்போக பயிர்ச்செய்கைக்காக அனைத்து பாரிய நீர்ப்பாசன குள கூட்டத்தினை கூடி முடிவு செய்ய முடியாத நிலை உள்ளதால், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகிய திருநாவுக்கரசு இராசநாயகம் ஆகிய நான் எனக்களிக்கப்பட்ட விசேட அதிகாரத்தின் மூலம் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி அன்று பின்வரும் குளங்களுக்கான பின்வரும் பயிர்ச்செய்கை அட்டவணையை இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

01.இரணைமடுக்குளம்
02.வன்னேரிக்குளம்.
03.அக்கராயன்குளம்.
04.கல்மடுநகர்.
05.கரியாலை நாகபடுவான்குளம்.
06.பிரமந்தனாறு.
07.புதுமுறிப்பு.
08.கனகாம்பிகைக்குளம்.

01.விஸ்தீரணம :- அனைத்து பாரிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அடங்கும் நீர்ப்பாசன பதிவேட்டிலுள்ள முழு விஸ்தீரணம்.

| | | |
|---|---|---|
| 02.விதைக்கும் நெல்லினம் | :- | 3–3 1/2 மாதம்<br>4–4 1/2 மாதம் |
| 03.வாய்க்கால் துப்புரவு செய்தல் | :- | 15.11.2005 வரை |
| 04.இறுதி விதைப்புத் திகதி | :- | 3–3 1/2 மாதம் 30.11.2005<br>4–4 1/2 மாதம் 15.11.2005 |
| 05.ஆரம்ப நீர் விநியோகம் | :- | 20.11.2005 |
| 06. இறுதி நீர் விநியோகம் | :- | 20.03.2006 |
| 07.கால்நடை கட்டுப்படுத்தல் | :- | 15.11.2005-30.03.2006 |

**வாய்க்கால் துப்புரவு செய்யத் தவறின் பாகத்திற்கு ரூபா 50.00 தண்டப் பணமாக அறிவிடப்படும்.**

**கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தரால் நியமிக்கப்படும் கால்நடை பிடிப்பவர்களால் பிடிக்கப்படும் கால்நடைகளுக்கு வழமைபோல் பயிர் அழிவு நட்டம் அறவிடப்படும். பயிர் அழிவு நட்டம் கட்டத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் அக்கால்நடைகள் விற்கப்படும்.**

தி. இராசநாயகம்.
அரசாங்க அதிபர்.
கிளிநொச்சி மாவட்டம்

(சி.13071)


**கிளிநொச்சி மகாவித்தியாலய முத்தமிழ் அரங்கம்**

**நிகழ்வுக்கு ஆதரவு தந்த**

- அரசாங்க அதிபர்
- வலயக்கல்விப்பணிப்பாளர்
- கல்விக்கழகம்
- தமிழர் புனர்வாழ்வுக்கழகம்
- தமிழீழ காவல்துறை
- கிராமிய பொருளாதார அபிவிருத்தி வங்கி
- அழகியற்கலாமன்றம்
- அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்
- மயிலேறு வர்த்தக நிலையம்
- மீனாட்சி நகைமாடம்
- தமிழீழ வைப்பகம்
- துரை பல்பொருள் வாணிபம்
- கலைமகள் அழகுமாடம்
- வர்த்தக பெருமக்கள், பெற்றோர்கள்,
- பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள்.

**நன்றி கூறி வாழ்த்துகின்றோம்**

**விளம்பர அனுசரணை தந்த**

- வேழன் பதிப்பகம்
- மசு பல்பொருள் வாணிபம்
- பிள்ளையார் மருந்தகம்
- யாழவன் சுத்திகரிப்பு நிலையம்
- குவி பல்பொறி வாணிபம்
- குமரகுரு புடைவை வாணிம்
- தின்னன் வேளாண் உள்ளீடு வாணிபம்
- முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை
- ஈழநாதம்



**ஆகியோருக்கு நன்றியைத்தெரிவித்து வாழ்த்துக்கூறுகின்றோம்.**

கல்விச்சமூகம்.
கிளி/கிளிநொச்சி ம.வி.

விளம்பர அனுசரணை:
**தின்னன் வேளாண் உள்ளீடு வாணிபம், முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை.**
பிரதான வீதி, கிளிநொச்சி.

(சி-13057)

# பாகிஸ்தானில் பூகம்ப மீட்புப் பணி முற்றுப் பெறா நிலையில் நிறுத்தம்!

(இஸ்லாமபாத்)

**பாகிஸ்தான் பூகம்ப மீட்புப் பணி முற்றுப் பெறாத நிலையிலும் கூட அதனைக் கைவிடும் நிலை உருவாகியுள்ளது. இதனால் பூகம்பத்தால் பலியானோர் தொகையை மதிப்பிடுவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

பூகம்பம் ஏற்பட்டு ஒருவாரகாலத்திற்கு மேலாகிவிட்ட நிலையில் மீட்பு நடவடிக்கைகள் இன்னமும் நிறைவுறவில்லை எனத் தெரிகின்றது. இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்கள் பெரும்பாலும் இறந்திருக்கக் கூடும் எனக் கணிக்கப்படுவதால் தாம் மீட்பு நடவடிக்கைகளை இடைநிறுத்தி விட்டதாகவும் தற்போது கட்டட இடிபாடுகள் அகற்றும் பணிகளே நடைபெற்று வருவதாகவும் பாகிஸ்தான் இராணுவ செய்தித் தொடர்பாளர் பரூக்நசீர் தெரிவித்தார்.

இதனை மறுத்த பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஒருவர், இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்கள் உயிருடன் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதாக தெரிவித்தார்.

இது குறித்து கருத்துத்தெரிவித்த ஐ.நா. ஒருங்கிணைப்பாளர் அலைன் பாஸ்கே-மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வந்த வெளிநாட்டு அமைப்புக்கள் எல்லாம் வெளியேறிவிட்டதாக தெரிவித்தார்.

கட்டட இடிபாடுகளுக்குள் இருக்கும் சடலங்களால் தொற்றுநோய் ஏற்படக்கூடிய நிலை தோன்றி இருப்பதாக சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



## நேபாளத்தில் ஐந்து பேர் துப்பாக்கி முனையில் கடத்தல்

(நேபாளம்)

நேபாளத்தில் மன்னர் ஆட்சிக்கு எதிராக மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் ஆயுதம் ஏந்திப் போராடி வருகிறார்கள். இராணுவத்திற்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த சண்டையில் இதுவரை பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பலியாகி விட்டனர்.

இந்த நிலையில் தீவிரவாதிகள் காத்மண்டு நகரில் இருந்து இம்தி நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஒரு பேருந்தை தடுத்து நிறுத்தினார்கள். அந்த பேருந்தில் இருந்த பயணிகளில் இரு பொலிசார், ஒரு இராணுவ வீரர் உட்பட ஐந்துபேரை தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று விட்டனர். இவர்கள் தசரா விடுமுறை முடிந்து திரும்பிக் கொண்டிருந்தவர்கள். கடத்தப்பட்ட ஐந்து பேரின் கதி என்ன என்பது பற்றி இதுவரை தெரியவில்லை.

## சென்னையில் தீ விபத்தில் நான்கு சிறுவர்கள் பலி

சென்னையில் எரிவாயு சிலிண்டர் வெடித்துப் பரவிய தீயினால் ஏற்பட்ட கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி நான்கு சிறுவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது.



வீட்டுப் பாவனையில் இருந்த எரிவாயு சிலிண்டரிலிருந்து வெளியேறிய எரிவாயு வீட்டின் அறையினுள் நிரம்பியிருப்பதை அறியாத வீட்டு உரிமையாளர். மின்னடுப்பை இயக்கவே அந்த வெப்பம் எரிவாயுவுடன் தாக்கமடைந்து எரியத் தொடங்கி தொடர் வீடுகளுக்கு பரவத்தொடங்கியது.

பரவிய தீ பக்கத்து வீட்டில் குவிக்கப்பட்டுயிருந்த தீந்தை வெற்றுப் பாத்திரங்களுக்கும் பரவி பற்றி எரியத் தொடங்கியதால் அக்கட்டடம் இடிந்து பக்கத்து குடிசை வீடுகளிற்கு மேல் விழுந்தது. இந்த இடிபாடுகளுக்குள்சிக்கி நான்கு சிறுவர்கள் பரிதாபமாய் உயிரிழந்தனர்.



பாரிசில் எலிசீ மாளிகையில்வைத்து பிரான்ஸ் சனாதிபதி ஜக்கூஸ் சிறாக் அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொண்டலீசா ரைஸை வரவேற்ற போது, இச் சந்திப்பு மத்திய கிழக்கு மற்றும் ஈரான் நாடுகளின் அணுத் திட்டம் தொடர்பான பேச்சுக்களுக்கு முன் இடம் பெற்றது.

# சீனாவில் பாடசாலைக்குள் கொடூரச் செயல் துப்பாக்கி தாரியின் வேட்டுக்கு 16 மாணவர்கள் பலி

சீனாவில் உள்ள ஒரு பாடசாலைக்குள் புகுந்த துப்பாக்கி தாரி ஒருவன் மாணவர்களை நோக்கி சரமாரியாகச் சுட்டதில் 16 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வளர்ந்த நாடுகளில் பாடசாலைகளுக்குள் புகுந்து துப்பாக் கிப் பிரயோகம் செய்வது போன்ற சம்பவங்கள் நடந்து வருகின்றன. அவை இப்போது கீழ்த்திசை நாடுகளுக்குள்ளும் பரவத்தொடங்கி விட்டன. சீனாவில் ஆன்குய் மாநிலம் நியூட்டோஷான் என்ற இடத்தில் ஒரு ஆரம்பப் பாடசாலை உள்ளது . அங்கு படிக்கும் மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது 33 வயது மதிக்கத் தக்க வாலிபன் ஒருவன் அங்கு நுழைந்தான். அவன் கைகளில் நாலைந்து துப்பாக்கிகள் இருந்தன. அவற்றால் மாணவர்களை நோக்கி சரமாரியாக சுட்டான். இதில் 16 மாணவர்கள் பலியானார்கள். 9 மாணவர்கள் காயமடைந்தனர்.

அவன் சுடுவதை தடுத்து நிறுத்த தலைமை ஆசிரியர் முயன்றார். அவரையும் சுட்டான். இதில் அவர் காயமடைந்தார். அதன் பின் அவன் அங்கிருந்து தப்பியோடிவிட்டான்.

அவனைப் பிடிப்பதற்காக 200 பொலிஸ்காரர்களைக் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டது. இந்தப்படை அவனைப் பல இடங்களில் தேடி மறுநாள் தலைநகர் பீஜிங்கில் வைத்து கைது செய்தது.

# நடுவானில் விமானங்கள் மோதின; நால்வர் பலி; சிலர் தப்பினர்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் இரண்டு விமானங்கள் நடுவானில் மோதிக் கொண்டு விபத்திற்குள்ளானதில் நால்வர் பலியாகியுள்ளனர். இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது.



அமெரிக்காவின் ஒகியோ பகுதியில் உள்ள விமான நிலையத்தில் இருந்து ஒரு செஸ்னா ரக விமானம் புறப்பட்டுச் சென்றது. அந்தக் குட்டி விமானத்தில் சில பயிற்சியாளர்களும் சில பயணிகளும் இருந்தனர். அந்த விமானம் புறப்பட்ட ஒரு சில நிமிடத்தில் லோங்கேர் ரகத்தை சேர்ந்த இன்னொரு குட்டி விமானம் புறப்பட்டது. அந்த விமானமும் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

அப்போது நடுவானில் இரு விமானங்களும் நேருக்குநேர் வந்தன. விமானத்தை உடனடியாக திரும்பவும், கீழே இறக்கவும், விமானிகள் முயன்றனர். அதற்குள் இரு விமானங்களும் மோதி விட்டன. மோதிய வேகத்தில் ஒரு விமானம் தலைக்குப்புற அங்குள்ள ஒருவயல் வெளியில் விழுந்தது.

இந்த விபத்தில் விமானங்களில் இருந்தவர்களில் நான்கு பேர் பலியானார்கள். மற்றவர்கள் காயத்துடன் உயிர் தப்பினார்கள். விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# பிரிட்டன் தடை விதித்த 15 அமைப்புக்களில் ஐந்து பாகிஸ்தானைச் சேர்ந்தவை!

இங்கிலாந்து நாட்டில் லண்டன் நகரில் பாதாள புகையிரத நிலையங்களில் குண்டு வைத்து தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பை பலப்படுத்த பல விதமான நடவடிக்கைகளை அந் நாட்டு அரசு எடுத்து வருகிறது.

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுள்ள 15 தீவிரவாத அமைப்புக்களை இங்கிலாந்து அரசு தடை செய்துள்ளது. அவற்றுள் ஐந்து அமைப்புக்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவை ஆகும். பங்களாதேஷைச் சேர்ந்த ஹர்கத்-உல்-ஜி-ஹாத்- உல் இஸ்லாமி என்ற அமைப்பும் தடை செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த ஐந்து அமைப்புக்களும் காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவை ஆகும்.

இவற்றில் சிபா-இ-சாஹப், லஸ்கர் இ-ஜாங்வி ஆகிய இரு அமைப்புக்களும், வன்முறை மூலம் பாகிஸ்தானை சன்னி முஸ்லிம் நாடாக மாற்றத் தீர்மானித்து செயற்பட்டு வருகின்றன. பாகிஸ்தானிலுள்ள அனைத்து ஷியா மக்களையும் 'காபிர்' எனப்பிரகடனப்படுத்தி ஒதுக்குவதும் மற்ற மதங்களையும், மதத்தினரையும், அழித்து ஒழிப்பதும் அவர்களது இலட்சியமாகும்.

இவை தவிர மேலும் ஒன்பது அமைப்புக்களையும் இங்கிலாந்து அரசு தடை செய்துள்ளது. இவர்கள் இங்கிலாந்துக்குள் நுழைவது, பணம் சேர்த்தல் என்பன தடை செய்யப்பட்டிருப்பதாக தெரிகிறது.

# இந்தோனேஷிய ஆச்சே கிளர்ச்சிவாதிகள் இரண்டாம் கட்டமாக ஆயுதங்களைக் கையளித்தனர்

(இந்தோனேஷியா)

இந்தோனேஷியாவின் ஆச்சே மாகாணத்தின் பிரிவின வாத கிளர்ச்சிவாதிகள் மூன்று தசாப்த கால கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் சமாதான ஒப்பந்தத்தில் ஓர் அம்சமான இரண்டாவது கட்ட ஆயுதக் கையளிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். வட ஆச்சே பிராந்தியத்தில் சுதந்திர ஆச்சே இயக்கத்தின் கிளர்ச்சிவாதிகள் 52 சுடுகலன்களை வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களிடம் கையளித்துள்ளனர். இந்த ஆயுதக் கையளிப்பின் போது ஆச்சே கண்காணிப்புக் குழுத் தலைவர். இந்தோனேஷிய அரசாங்கத்தின் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். அரசாங்கத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி கல்சியில் செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்திற்கு அமைய ஆயுதக் கையளிப்பு இடம் பெற்றது. இந்த வருடத்திற்கு முன்னர் கிளர்ச்சியாளர்கள் நான்கு கட்டங்களில் 840 துப்பாக்கிகள் அடங்கலாக தமது ஆயுதங்களை கையளிக்க உறுதி அளித்துள்ளனர். அதே சமயம் அரசாங்கம் ஆச்சே மாகாணத்தில் இருந்து கால்பங்கு படையினரை திரும்பப் பெற்றுள்ளது. கிளர்ச்சியாளர்கள் தமது சுதந்திரக் கோரிக்கைகளுக்கு பதிலாக சுமார் நான்கு மில்லியன் மக்கள் வாழும் ஆச்சே மாகாணத்திற்கு உள்ளூராட்சி முறைமை ஒன்றை ஏற்றுக் கொள்ள இணங்கியுள்ளனர்.

# உளநலம் பாதிப்புற்றோரைக் குணமாக்க ஒன்றிணைந்து பணியாற்றுதல் அவசியம்

### மனநல மருத்துவர் தொண்டர் நிறுவனங்களுக்கு அழைப்பு

(செட்டிகுளம்)

**வவுனியாவில் பத்துவரையிலான சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் உளவள வேலைத்திட்டங்களினை மேற்கொண்டு வரும்போதும் போதியளவு ஒருங்கிணைப்பு இல்லாமை காரணமாக வவுனியாவில் உளவள பாதிப்பிற்குள்ளானவர்களை சாதாரணநிலைக்கு கொண்டு வருவதில் பெரும் சிரமம் இருப்பதாக மனநல மருத்துவர் சுதாகரன் வவுனியா பொதுமருத்துவ மனையின் சர்வதேச உளவள தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் தெரிவித்தார்.**

வவுனியா மாவட்டத்தில் மாதாந்தம் ஐம்பது பேர் வரையில் உளவள பாதிப்பிற்குள்ளாகி சிகிச்சை பெற்று வருவதாகவும் தற்போது வவுனியா பொதுமருத்துவமனையில் 750 பேர் வரை சிகிச்சை பெற்று வருகின்ற போதும் 200 பேர் வரை ஒருமுறை அல்லது இருமுறை மட்டுமே சிகிச்சை பெற்று இருப்பதாகவும் தெரிவித்தார். இந்த நோயினை ஆரம்பத்தில் கண்டு சிகிச்சை அளிப்பதன் ஊடாக நல்ல பயனைப் பெற முடியும் என்றும் ஆனால் பெரும்பாலானவர்கள் நோய்அதிகரித்ததன் பின்னரே சிகிச்சைக்கு வருவதாகவும் இதற்கு சமூகத்தின் மத்தியில் சரியான விழிப்புணர்வு இல்லாமையே காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

செட்டிகுளம், புளியங்குளம், நெடுங்கேணி ஆகிய இடங்களிலும் தம்மால் சிகிச்சை மாதத்தில் ஒரு முறை வழங்கப்படுவதாகவும் 2004 ஆம் ஆண்டு வவுனியா பொது மருத்துவமனையில் இடம் பெற்ற இறப்புகளில் தற்கொலைக்கு கூட மனநோயே காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பவானி பசுபதிராஜா உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர். (21)

# அணைக்கட்டின் மேலால் பயணிப்பதால் ஆபத்து!

### –விபத்தில் உந்துருளி குளத்தினுள் வீழ்ந்தது

(விசுவமடு)

கிளிநொச்சி குளஅணைக்கட்டின் மேலால் பயணித்த இரு உந்துருளிகள் எதிரெதிரே மோதிக்கொண்டதில் உந்துருளியொன்றில் பயணித்தவர் குளத்தினுள் வீழ்ந்து படுகாயமடைந்ததோடு உந்துருளியும் சேதமடைந்தது.இந்தச் சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

குளத்தின் அணைக்கட்டின் கீழாக சீரான போக்குவரத்துப் பாதை இருந்தும் அதனூடாகப் பயணிக்காது ஒடுங்கிய அணைக்கட்டில் பயணிக்கும் சிலர் அவ்வப்போது விபத்துக்களில் சிக்கி வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகள்ள எடுக்க வேண்டியது அவசியமாகும். (41)

# 50 ஆயிரம் பனம்விதைகள் நடுகை செய்யத்திட்டம்

மன்னார் மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் 2005ஆம் ஆண்டு மடுப்பிரதேசத்தில் ஐம்பதாயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் தெரிவித்தார்.

அடுத்து அடம்பன் பிரதேசத்திலும் ஐம்பதாயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளதாகவும் பிரதேச இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (40)


# மொறக்கொட்டாஞ்சேனையில் தாக்குதல் வயோதிபர் உட்பட இருவர் காயம்!

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ்சேனையில் நேற்று முன்தினம் முற்பகல் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இருவர் காயமடைந்துள்ளனர்.

ஈருருளியில் வந்த இனந்தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட இத்துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்கள் கோரகல்லிமடுவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ராஜு (வயது 34), மொறக்கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த செல்லன் கிருஸ்ணபிள்ளை (வயது 60) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இருவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வீதியில் நின்ற கணபதிப்பிள்ளை ராஜுவை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அப்போது அந்த வழியாக ஈருருளியில் சென்று கொண்டிருந்த வயோதிபரும் காயமடைந்ததாக ஏறாவூர் பொலிசார் தெரிவித்தனர். இலக்கு வைக்கப்பட்ட கணபதிப்பிள்ளை ராஜு, விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்பதால் கருணா குழுவினரே இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியிருக்கக் கூடும் என்று கூறப்படுகிறது. இதனிடையே கொம்மாந்துறை முகாமில் பணியாற்றும் இராணுவ வீரரான லான்ஸ் கோப்ரல் ரி.ஜி.மில்டன் என்பவர் கடந்த பத்தாம் திகதி முதல் தலைமறைவாகியுள்ளார்.வீதிக் கண்காணிப்புப் பணிக்குச் சென்ற இவர் கடமை முடிந்து முகாம் திரும்பவில்லை. இது தொடர்பாக ஏறாவூர் பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

### –கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில்–

# சிறுவர் விடுதி புனரமைப்பு-பூங்கா,நூலகம் திறப்பு





(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை சிறுவர் விடுதி புனரமைக்கப்பட்டு சிறுவர் பூங்கா, சிறுவர் நூலகம் என்பன திறக்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மேற்படி சிறுவர் பூங்கா,சிறுவர் நூலகம் என்பன நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த சிறுவர் பாதுகாப்பு ஆலோசகர் வார்ஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வைத்திய அதிகாரி தலைமையில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த அலைச்சான்றா, சுதன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் மாவட்ட வைத்தியசாலை வைத்தியர்கள் தாதிமார்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (தீ,கு)


# சிறந்த அதிபர் ,ஆசிரியர்களாக கிளி. மாவட்டத்தில் தெரிவானோர்

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சிறந்த அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து சிறந்த ஆசிரியர்களும் சிறந்த அதிபர் ஒருவரும் சிறந்த ஆசிரிய ஆலோசகர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி அதிபராக கிளி. மயில்வாகனபுர அ.த.க.பாடசாலை அதிபர் எஸ்.இராஜசிங்கமும் சிறந்த ஆசிரிய ஆலோசகராக திருமதி ந.இதயநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சிறந்த ஆசிரியர்களாக திருமதி ஜெயலட்சுமி மாணிக்கவாசகம் (முழங்காவில் ம.வி), திருமதி ஜெயலலிதா-துரைசிங்கம் (புனிததிரேசா பெண்கள் கல்லூரி), செல்வி லதாறஞ்சினி-இராசையா (அக்கராயன் ம.வி), திருமதி நளாயினி-ஜெயபாலசிங்கம் (இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை), எஸ்.கேதீஸ்வரன் (கனகாம்பிகை அ.த.க. பாடசாலை)ஆகிய ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டு திருகோணமலையில் கௌரவிக்கப் பட்டுள்ளனர். (கு.தீ)



கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினரால் நேற்று முன்தினம் காலை உதயநகர் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து உதயநகர் கிராம மக்களுக்காக நடாத்தப்பட்ட காணி பகுதி நாள் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் ஒரு பகுதியினரையும் அதிகாரிகளையும் படத்தில் காணலாம்.

(படம்:- சோதி)

# மேட்டுநில பயிர்ச்செய்கை, நெற்செய்கை பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள், உள்ளீடுகள் வழங்கல்



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனங்களில் ஒன்றான அக்கராயன் அபிவிருத்தி நிறுவனம் போரூட், நொராட் நிறுவன நிதிப்பங்களிப்புடன் அக்கராயன் கிராமசேவகர் பிரிவிலுள்ள மேட்டு நில பயிர்ச் செய்கை, நெற்செய்கை பயனாளிகள் 28 பேருக்கு விவசாய உபகரணங்கள், உள்ளீடுகள் என்பனவற்றை நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

நிறுவனத் தலைவர் .கிருஷ்ணபிள்ளையின் தலைமையுரையினைத் தொடர்ந்து, உரைகளை கரைச்சிப் பிரதேச உப பணிமனைப் பொறுப்பலுவலர் மகேந்திரன் போரூட் நிறுவன வெளிக்கள இணைப்பாளர் கே.நிறஞ்சலன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அக்கராயன் பிரதேச இணைப்பாளர் புண்ணியமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து, 28 பயனாளிகளுக்கான விவசாய உபகரணங்கள், உள்ளீடுகள் என்பன வழங்கப்பட்டன.

அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தின் வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் 28 பயனாளிகளுக்கு ரூபா 570000 பெறுமதியான விவசாய உபகரணங்கள், உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

# ஆக்கத்திறன் கண்காட்சி

(உடையார்கட்டு)

உடையார்கட்டு மகாவித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவு மாணவர்களின் ஆக்கத் திறன் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது.

இக் கண்காட்சியை கோட்ட கல்வி அதிகாரி ஜி.எஸ் பரமேஸ்வரன் திறந்து வைத்தார்.கற்றல் செயல்திறன் பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டதை அவதானிக்க கூடியதாக இருந்தது. (19)

# அரிசிஆலைகளில் தேடுதல் 48 தமிழர்கள் கைது!

பொலநறுவையில் உள்ள அரிசி ஆலைகளில் கடந்த வியாழக்கிழமை இரவு சிறிலங்காப் பொலிசார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது அங்கு பணியாற்றிய 48 தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்புநேற்று முன்தினம் அதிகாலை விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்கள் இந்த அரிசி ஆலைகளில் பணியாற்றுவதாக கிடைத்த தகவலையடுத்து இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ்தரப்பு கூறியுள்ளது.

இதேவேளை பொலநறுவை பிரதேசத்தில் உள்ள அரிசி ஆலைகளில் பணியாற்றும் தமிழர்கள் தொடர்பான விபரங்களை பொலிசார் உரிமையாளர்களிடம் பெற்றுள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் படுகொலைச் சம்பவங்கள் குறித்து பொலிசாரின் செயற்பாடுகளில் யாழ்.நீதித்துறையினர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் அண்மைக்காலமாக படுகொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றபோதும் சிறிலங்காப் பொலிசாரின் செயற்பாடுகள் திருப்திகரமற்றமுறையில் இருப்பதாக நீதித்துறையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

குறிப்பாக படுகொலைகள் இடம்பெறும் பகுதிகளுக்கு பொலிசார் காலதாமதமாக வருவதாகவும், சம்பவ இடத்தில் கொலைகள் தொடர்பான சாட்சியங்களைப் பாதுகாக்கத்தவறுவதாகவும் குற்றம் சாட்டியுள்ள நீதித்துறையாளர்கள்,

சம்பவ இடத்தில் நிற்கும் பொது மக்களை அதிகார நோக்குடன் எதிரிகள் போல அணுகுவதால் கொலைகள் சம்பந்தப்பட்ட சாட்சியங்களைப் பொதுமக்கள் வழங்கப் பின்னிற்பதாகவும் கூறுகின்றனர்.

அத்துடன் பொலிசாரின் பலவீனமான செயற்பாடுகளும், அசமந்தப் போக்குகளும் யாழ்.குடாநாட்டில் கொலைச்சம்பவங்களை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளதாகவும் இது பொதுமக்களின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கியிருப்பதாகவும் கூறுவதுடன் சில அசம்பாவிதங்களுக்கும் பொலிசாரே துணை போவதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர். (33)

## யாழ். வைத்தியசாலை உலுக்கிடங்கிலுள்ள சடலங்களைப் பொறுப்பேற்குக!

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலையில் பொறுப்பேற்கப்படாத நிலையில் தொடர்ந்தும் பிரேதஅறையில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று சடலங்களைப் பெறுப்பேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் பரந்தன் வீதி கிளிநொச்சியைச்சேர்ந்த லெட்சுமணன் அரியரத்தினம், முல்லைத்தீவைச்சேர்ந்த இராஜன்-நாராயணன், 1ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கௌ-புஸ்பவதி ஆகியோரது சடலங்களே இவ்வாறு பொறுப்பேற்கப்படாத நிலையிலுள்ளன.

இச் சடலங்கள் காலக்கிரமத்தில் உரித் துடையோரினால் பொறுப்பேற்கப்படாத பட்சத்தில் அவை அரச செலவில் அடக்கம் செய்யப்படும் என்றும் யாழ்.போதனாவைத்தியசாலையால் அறிவிக் கப்பட்டுள்ளது. (33)

# தென்மராட்சியில் 1301 சிறார்கள் மீண்டும் கல்விச் செயற்பாட்டிற்குள் உள்ளீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி கல்வி வலயத்தில் கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்தியிருந்த 1301 சிறார்கள் மீண்டும் கல்விச் செயற்பாடுகளில் உள்ளீர்க்கப்பட் டுள்ளதாக தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதிய அனுசரணையுடன் யாழ். குடாநாடெங்கும் அமுல் செய்யப்பட்ட இழந்த கல்வியை மீளப்பெறுதல் என்ற திட்டத்தின் கீழ் இந்த 1301 சிறார்களும் மீண்டும் தமது கல்விச் செயற்பாடுகளை தொடர்கின்றனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்திய மாணவர்களை இனம் காணுதல், அவர்களை மீண்டும் கல்வியில் இணைத்தல், அவர்களுக்கு தேவையான உதவிகளையும், நிவாரணங்களையும் வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் குறிப்பிட்ட தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர், கடந்தகால யுத்த அனர்த்தம், இடம்பெயர்வு, வறுமை என்பவற்றால் பாதிக்கப்பட்டு கல்வியை இடைநிறுத்தியுள்ள மேலும் பல சிறார்கள் மீண்டும் கல்வி நடவடிக்கைகளில் இணையும் வாய்ப்பு உள்ளதாகவும் கூறினார். (33)

## தொலைக்காட்சியைப் பழுதுபார்த்தவர் மின்சாரம்தாக்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கியதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை வடமராட்சி தொண்டமனாற்றுப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்தவரும், இருபிள்ளைகளின் தந்தையாருமான வீரகுலசிங்கம் குகநாதன் (வயது-31) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபர் தனது வீட்டில் மின்சுற்றுடன் இணைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டியை கழற்றிப் பழுதுபார்க்க முற்பட்ட சமயமே இவரை மின்சாரம் தாக்கியுள்ளது.

உயிரிழந்தவரது சடலம் உடனடியாக வல்வெட்டித்துறை வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மரண விசாரணைகளைப் பருத்தித்துறை மாவட்டநீதிபதி க.அரியநாயகம் மேற்கொண்டார். (33)

# குடாநாட்டு பொலிஸ் நிலையங்களில் பெருமளவு இராணுவத்தினர் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உள்ள சிறிலங்காப் பொலிஸ் நிலையங்களுக்கு அதிகளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டு இருப்பதாக தெரிய வருகிறது.

வீதிச் சோதனைகளில் ஈடுபடும் பொலிசாருக்கும் மேலதிக ஆயுதம் தாங்கிய படையினரின் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

பொலிசாருடன் இணைந்து நிற்கும் படையினர் பொதுமக்களுடன் முரண்பாடுகளில் ஈடுபடுவதாகவும், பொது மக்களின் வாகனங்களையும் பொலிசாருடன் நிற்கும் படையினர் மறித்து வருவதாகவும், இத்தகைய செயற்பாடுகள் சிவில் நடைமுறைக்கு முற்றிலும், முரணானது என்றும், பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்களுடன் நிற்கும் படையினர் சோதனை வேளைகளில் பொது மக்களை அச்சுறுத்தி வருவதாகவும், இத்தகைய செயற்பாடுகள் மக்களை கடும் விசனத்திற்குள்ளாக்கி இருப்பதாகவும், தெரிவிக்கப்படுகின்றது. (28)

# சமுர்த்தி நிவாரணத் திட்டத்தின் பெயரால் உலர் உணவு நிவாரணம் நிறுத்தம்

## யாழ்.இல் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் அமுல் செய்யப்பட்டிருக்கும் நிவாரணத் திட்டம் குறித்து பொது மக்கள் தரப்பிலிருந்து கடுமை யான அதிருப்தி தெரிவிக்கப்பட் டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ். குடாநாட்டு மக்களுக்கு கடந்த காலங்களில் விநியோகிக்கப்பட்டு வந்த உலருணவு நிவாரணம் நிறுத்தப்பட்டு சமுர்த்தி நிவாரணத்திட்டம் தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் உலருணவு நிவாரணம் முன்னர் வழங்கப்பட்டுவந்த பலருக்கு இந்த சமுர்த்தி நிவாரணத்திட்டத்தின் கீழ் நிவாரண விநியோகம் வழங்கப் படவில்லை.

இதனால் ஏராளமான வறுமைப் பட்ட மக்கள் நிவாரணம் கிடைக்காது அவலநிலையில் வாழ்கின்றனர்.

இது குறித்து பொதுமக்கள் தரப்பிலிருந்து அரச அதிபரிடமும் பிரதேச செயலாளர்களிடமும் பொதுமக்கள் புகார்களைத் தெரிவித்துள்ளபோதும் எவரும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இதனால் பொதுமக்கள் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். (33)

## சுகாதாரமற்ற உணவு விற்பனை உணவக உரிமையாளர் நீதிமன்றில்

(யாழ்ப்பாணம்)

உணவுப்பொதியில் புழு இருந்த காரணத்தினால் உணவகம் ஒன்றின் உரிமையாளருக்கு யாழ். நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

யாழ்-பெருமாள் கோவிலுக்கு சமீபமாக உள்ள உணவகம் ஒன்றின் உரிமையாளருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது.

மேற்படி உணவகத்தில் பொதுமகன் ஒருவரால் வாங்கப்பட்ட உணவுப்பொதியில் புழு இருந்ததைத் தொடர்ந்து அப்பொதுமகன் இது தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட உணவக உரிமையாளர் நேற்று முன்தினம் மாலை யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதவான் திருமதி-ஸ்ரீநிதிநந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதன்போது உணவுப் பொதியில் புழு இருந்தமை உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவ் உணவக உரிமையாளருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதித்த நீதவான் அவரைக் கடுமையாக எச்சரித்து ~~விடுவித்தார்.~~ ~~(33)~~

# தேர்தல் சட்டங்களை இறுக்கமாக அமுல்செய்க! யாழ்.உ. தே.ஆணையாளருக்கு தே.ஆணையாளர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் சட்டங்களை இறுக்கமான முறையில் அமுல் செய்யுமாறு சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் யாழ்.மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளருக்கு இலங்கைத் பணிப்புரை விடுத்துள்ளார்.

அந்த வகையில் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை வன்முறைகள் அற்றவிதத்தில் நடத்தவும், பிரச்சாரப் பணிகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் உரிய நடவடிக் கைகளை எடுக்குமாறும் தேர்தல் சட்டங்களை மீறுவோர் மீது கடுமை யான நடவடிக்கைகளை எடுக்கு மாறும் யாழ் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ள தேர்தல் ஆணையாளர்,

வன்முறைகள் ஏற்படாதவாறு வாக்கெடுப்புக்களை நடத்தவும், முறைகேடுகள் இடம் பெறுவதைத் தடுக்கவும் வாக்களிப்பு நிலையங்களுக்கு கடுமையான பாதுகாப்பை வழங்க ஏற்பாடு செய்யுமாறும்.

வாக்கெடுப்பின் போது முறைகேடுகள் நிகழ்ந்தால் மீள் வாக்கெடுப்பை நடத்த ஏற்பாடு செய்யுமாறும் மேலும் உத்தரவுபிறப்பிக்கப் பட்டுள்ளது. (33)

# உலங்கு வானூர்தி வழங்கியதற்கு ஜாதிகஹெல உறுமய கண்டனம்

மட்டக்களப்பு வவுணதீவில் காயமடைந்த விடுதலைப்புலி உறுப்பினரை கொழும்பிற்குக் கொண்டு வருவதற்கு உலங்குவானூர்தியை வழங்கியதற்கு ஜாதிகஹெலஉறுமய கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜாதிகஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபிததேரர் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தக் கண்டனம் தெரிவிக் கப்பட்டுள்ளது. காயமடைந்து சிகிச் சைக்கெனக் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் எமது இராணுவத்தினருக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுத்தவர்கள். இவ்வாறானவர்களுக்கு பாதுகாப்புப்படை வானூர்தியை வழங்கியதனூடாக நாட்டிற்கும் இனத்திற்கும் பாதுகாப்புப் படையினருக்கும் சந்திரிகா துரோகமிழைத்துவிட்டார். விடுதலைப்புலிகளினால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக் கப்பட்டுள்ள மூன்று காவல்துறை அதிகாரிகளை விடுவித்துக்கொள்வதற்கு எவ்வித நடவடிக்கையையும் எடுக்காத சந்திரிகா இவர்களுக்கு உதவுவதற்கு நடவடிக்கை எடுத்தமையைக் கண்டிக்கின்றோம். இவ்வா றான செயற்பாடுகளினால் இராணு வத்தினரின் மனஉறுதி பாதிப்படை யும் என்றும் சோபிததேரர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தேர்தல் பிரச்சாரக் களத்தில்

# காணாமல் போயுள்ள முகங்கள்

சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் ஒருமாதம் மட்டுமே உள்ள நிலையில் இத்தேர்தலில் பிரதான போட்டியாளர்களான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் தேர்தல் பிரச்சாரங்களிலிருந்து விலகி நிற்பது வெளிப்படையாகவே வெளித்தெரியத் தொடங்கியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை சிறிலங்காவின் தற்போதைய சனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியுமாகிய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரச்சாரங்களிலிருந்து வெளியே நிற்கிறார். மற்றவர் அவரது சகோதரரும் தற்போதைய வெளிவிவகார அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்க ஆவார்.

இவர்களைவிட பொ.ஐ.மு பொதுச் செயலாளர் தி.மு. ஜெயரட்ண, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்க போன்றோரும் பிரச்சார நடவடிக்கையில் பெருமளவில் பங்கேற்கவில்லை என்றே கூறப்படுகிறது. இதேவேளை ஜே.வி.பி சனாதிபதித் தேர்தலில் தீவிர பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளபோதும் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க தேர்தல் பிரச்சாரத்தில் பெருமளவில் கலந்துகொள்வதாகத் தெரியவில்லை. தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் அவர் "இராணுவத்தைக் கலைத்துவிட வேண்டும்" எனக் கூறியது பெரிய விவகாரமாகிவிட்டதால் அவர் பிரச்சாரங்களிலிருந்து விலகியிருப்பதுபோலத் தெரிகிறது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரச்சாரங்களிலும் கூட சில முக்கிய முகங்களைக் காணவில்லை. அதாவது ஐதேக வின் பேச்சாளரும் முன்னாள் அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ், முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட ஆகியோரே அவர்கள். இந்த இருவரும் புலிகளுடனான பேச்சுவார்த்தைக் குழு அரச தரப்பு அங்கத்தவர்கள். அதேவேளை சபாநாயகர் லொக்கு பண்டாரவும் பிரச்சாரக்களத்தில் இல்லை. எவ்வாறாயினும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரச்சார நடவடிக்கையில் ஈடுபடாதது மகிந்த ராஜபக் ஷவின் வெற்றியில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது முக்கியமானதாக இருக்கின்றது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாரம் வாரியப் பொலவில் நடந்த கூட்டமொன்றில் மகிந்த ராஜபக்ஷவுடன் ஒரேமேடையில் தோன்றியிருக்கிறார். எனினும் அது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பிரச்சார மேடை என்பதை விட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வின் பிரிவுபசார விழா மேடை போலவே அமைந் திருந்தது. ஏனெனில் சனாதிபதி சந்திரிகா குமார துங்க உரையாற்றும்போது தான் அரசியலி லிருந்து 60 வயதில் விலகிவிடப் போவதாக முன்னரே கூறியதாகவும் அவ்வாறே விலகப்போ


சோமவன்ச

வதாகவும் நிமிர்ந்த நிலையிலேயே வீட்டிற்குச் செல்லப் போவதாகவும் கூறினார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இம்மேடையில் உரையாற்றும்போது சனாதிபதி சந்திரிகா தொடர்ந்தும் கட்சிக்கு தனது சேவையை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இவ்வாறான உரைகள் வழமையாக பிரிவுபசார மேடைகளிலேயே பேசப்படுவனவாகும். ஏனெனில் உண்மையில் சந்திரிகாவின் அபிலாசை என்ன? மகிந்தவின் விருப்பம் என்ன? என்பது மக்களுக்குத் தெரியும்.

இக்கூட்டம் முடிவடைந்த கையோடு சந்திரிகா லண்டன் புறப்பட்டு விட்டார். இம்மாத இறுதியிலேயே அவர் நாடு திரும்புவார் எனக் கூறப்படுகிறது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு அமையவே தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட வேண்டும் எனக் கூறிவரும் அவர் இன்று தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். உண்மையில் அவர் கடந்த ஒரு மாதமாக நாட்டில் இல்லாத நிலையிலும் அடுத்த 15 நாட்களுக்கு இருக்காத நிலையிலுமே இன்னும் ஒரு மாதத்தில் சனாதிபதித் தேர்தல் எதிர்கொள்ளப் படுகின்றது. இத்தனைக்கும் இத்தேர்தல் மகிந்த ராஜபக்ஷவினால் இலகுவாக வெற்றி கொள்ளப்படும் என்று கூறிவிடுவதற்கு இல்லை. போட்டி பலமானதாகவே இருக்கும் என எதிர்வு கூறப்படுகிறது. இந்நிலையில் சனாதிபதி இவ்வாறு பிரச்சாரங்களில் கலந்து கொள்ளாது தவிர்ப்பது அதிலும் மகிந்த ராஜபக்ஷவின் நிலைப் பாட்டுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டுக்கும் இடையே வேறுபாடிருப்பதாக வெளிப்படுத்திக் கொண்டு விலகியிருப்பது சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களிடம் குழப்பத்தை ஏற்படுத்தி மகிந்த ராஜபக்ஷவிற்கு நெருக்கடி கொடுப்பதாகவே இருக்கும். அது எவ்வகையான விளைவைக் கொடுக்கும் என்பது தான் தேர்தல் முடிவுகளின்பின் தெரியவரும்.

இதேவேளை பண்டாரநாயக்க குடும்பத்தின் அடுத்த அரசியல் வாரிசாக உள்ள அநுரா பண்டாரநாயக்க தான் தேர்தல் பரப்புரைகளிலிருந்து விலகி விட்டதாக வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறார். ஆனால் இதற்கு அவர் வெளியிட்டிருக்கும் காரணம் தான் இங்கு கவனிக்கத்தக்கது. அதாவது இனப்பிரச்சினைக்கு சமஷ்டித் தீர்வு, பொதுக்கட்டமைப்பு அமுலாக்கம் என்பனதான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கை எனவும் அதனை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டால் தான் அவருக்கு ஆதரவு என்றும் கூறியிருக்கிறார்.

ஆனால் அவ்வாறான ஓர் உறுதிமொழியை மகிந்த ராஜபக்ஷ வழங்கினால் அது ஜே.வி.பி யுடனும் ஜாதிக ஹெல உறுமயவுடனும் செய்து


ரட்ணசிறி


கொண்ட ஒப்பந்தங்களுக்கு முரணானதாக அமைந்து விடும் என்பது அவருக்கு நன்றாகவே தெரியும். எனவே ஜே.வி.பி யுடனான கூட்டை உடைப்பதே இவ்வாறான கோரிக்கையின் நோக்கமாகும்.

ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதில் முன்னர் விடாப்பிடியாக இருந்தவர் அநுரா பண்டாரநாயக்க. கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஏற்பட்ட கூட்டுக்கு மங்கள சமரவீரவும் இவருமே முக்கிய காரணகர்த்தாக்கள். கூட்டுத் தொடர்பான ஒவ்வொரு பேச்சுவார்த்தையிலும் இவ் இருவரும் கலந்துகொண்டிருந்தனர். ஜே.வி.பி யுடன் கூட்டுச்சேர்ந்தால் சகோதரியென்றும் பாராமல் நடவடிக்கை எடுக்கப் போவதாகச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது சீறிப்பாய்ந்தவர் அநுரா பண்டாரநாயக்க.

அதற்குக் காரணம் ஜே.வி.பி யுடனான ஐக்கிய கூட்டின் மூலம் தேர்தலில் வெற்றி பெற்றால் ஜே.வி.பி யின் ஆதரவுடன் பிரதமரான மகிந்த ராஜபக்ஷவை ஓரம் கட்டி விடலாம் என்பதாக இருந்தது.

இந்தக் கூட்டை உடைய விடாது காக்க அநுரா இறுதி வரை பாடுபட்டார்.

ஜே.வி.பி யுடன் மகிந்த ராஜபக்ஷ கூட்டை



ஏற்படுத்திக் கொண்டபோது அதாவது ஒப்பந்தம் கைச்சாத்தா கிய தினத்தன்றுகூட மகிந்த ராஜபக்ஷவின் அருகிலேயே அநுரா பண்டாரநாயக்க இருந்தார். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறானதொரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டாம் என வலியுறுத்திய பின்னரும் கூட அநுரா அந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

பின்னர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் அமெரிக்கா சென்றபின்னர் தான் அவருக்கு இப்போதைய ஞானோதயம் பிறந்திருக்கிறது. வெளிவிவகார அமைச்சராக இருக்கின்றமையால் சர்வதேசத்தைக் கவரும் வகையில் சமஷ்டித் தீர்வு குறித்தும் பொதுக்கட்டமைப்பு குறித்தும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

ஆனால் சகோதரர்கள் இருவருடைய நோக்கமும் பொதுவானது. அதாவது மகிந்த ராஜபக்ஷவுக்கு நெருக்கடி கொடுத்து தமது வாரிசு அரசியலுரிமையைத் தக்க வைத்துக்கொள்வதே இவர்களின் நோக்கமாகும். ஏனைய இருவர் களான தி.மு.ஜெயரட்ண, ரட்ணசிறிவிக்கிரம நாயக்க ஆகியோர் பண்டாரநாயக்க குடும்பத்தின் தீவிரவிசுவாசிகள் என்பது ஒருபுறமிருக்க ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் பதவிகளைத் தட்டிப் பறித்துக் கொண்டவர் மகிந்த ராஜபக்ஷ. 2001 ஆம் ஆண்டு தேர்தலில் பொ.ஐ.மு வின் தோல்வியின் பின் எதிர்க்கட்சித் தலைவராக ரட்ணசிறிவிக்கிரமநாயக்க நியமிக்கப்பட்டிருந்தபோது சிலகாலம் அவர் தலைமறைவாகிய போது மகிந்த ராஜபக்ஷ தமது ஆதரவாளர்களின் துணையுடன் அப்பதவியைப் பறித்துக்கொண்டார். இதன் காரணமாகப் பின்னர் பிரதமர் பதவியும் அவருக்கு இல்லாது போயிற்று 2004 ஆம் ஆண்டு தேர்தலில் இவர் போட்டியிட முடியாதுபோன நிலையில் பின்னர் சனாதிபதி சந்திரிகாவின் தயவினாலேயே அவருக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவி கிடைத்தது.


தி.மு.ஜெயரட்ணவைப் பொறுத்தவரை சிரேஷ்ட உறுப்பினர் என்ற வகையில் தானே அடுத்த சனாதிபதி வேட்பாளர் என்று அவர் கூறிவந்தார். ஆனால் அது அவருக்கு கிட்டாத போது [illegible] காட்டிக்கொண்டாலும் மனத்தாங்கல் இருக்கவே செய்யும்.

இவையொருபுறமிருக்க ஐதேக வின் பிரச்சார மேடையிலிருந்து விலகியிருக்கும் இருவர் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரச்சாரத்தின் மிகமுக்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் பார்த்தால் மிகமுக்கியமானவர்கள். ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகிய இருவருமே அவர்களாவர்.

தோதலில் தான் வெற்றிபெற்றதும் இரண்டாம் கட்டமாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப் போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறிவருகிறார். அவரது முக்கிய பிரச்சாரமே அதுதான். அவ்வாறு இருக்கையில் அவரது பாசையில் முதலாம் கட்டப் பேச்சுவார்த் தையின்போது அரசாங்கத் தரப்பு பிரதிநிதி களாக கலந்து கொண்ட இவர்கள் விலகியிருப்பது மிக முக்கியமானதாகும்.



இவர்கள் இருவரும் ஐ.தே.க வின் தேர்தல்


பீரிஸ்


ரணில்


மிலிந்த மொறகொட

விஞ்ஞாபனத்தில் திருப்தி இன்மையை வெளிப்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதாவது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள சில விடயங்கள் நிறைவேற்றப் பட முடியாதவை என இவர்கள் கூறுகின்றனராம். ஆனால் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் எல்லாம் நிறைவேற்றப்படக் கூடியவையாகவே அமைய வேண்டும் என இவர்கள் உண்மையிலேயே கருதுவார்களாயின் அரசியலில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள். எனவே இவர்கள் விலகியிருப்பதன் பின்னணியில் வேறுகாரணங்களே நிச்சயம் இருக்கும்.

இம்முறை சனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தை எடுத்துக்கொண்டால் 2004 ஏப்ரலில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது விட்ட தவறை ஐ.தே.க திருத்திக் கொள்வது போலவே தெரிகிறது. அதாவது கடந்த தேர்தலின்போது சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரச ஊழியர் சம்பள உயர்வு, வேலைவாய்ப்பு போன்ற

**வேலவன்**

அதீதமான வாக்குறுதிகளை வழங்கியே வெற்றி கண்டது. ஆனால் ஐ.தே.க அவ்வாறான வாக்குறுதி களை வழங்கவில்லை. அதனால் தோல்வி கண்டதென ஒரு விமர்சனம் இருந்தது.

இம்முறை அக்குறைகளைப் போக்கும் வகையில் வருடத்திற்கு 13 முறை சம்பளம், பத்து இலட்சம் வேலை வாய்ப்பு, உரவிலைக் குறைப்பு என எதிரணியே அசந்து போகும் வகையில் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றது.

இதெல்லாம் முக்கியமில்லை. நாட்டை பிளவுபடாது பார்த்துக் கொள்வதே முக்கியமென ஜே.வி.பி கூறுமளவுக்கு ஐ.தேக வாக்குறுதிகளை தினந்தினம் கற்பனைக்கு எட்டிய வகையில் வீசி வருகின்றது.

அதுவொருபுறமிருக்க குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதுபோல சந்திரிகாவினதும் அநுராவினதும் நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு சிறிலங்கா சுதந்திரக் [illegible] ஜே.வி.பி யிடமிருந்து காப்பாற்றி சனாதிபதி சந்திரிகாவிடம் வழங்க [illegible] ஐ.தேக விடுக்கும் அழைப்பே இப்போது மிகப் பலமானதாக இருக்கின்றது.

# நிதிநிலை அறிக்கையில் மகிந்தவின் கொள்கைகள்

## -விமல் வீரவன்ச தெரிவிப்பு

பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ள நிதி நிலை அறிக்கையில் சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளவை எதிரொலிக்கும் என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் ஜே.வி.பி. கட்சியின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறியதாவது.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார். ஆனால், மகிந்த ராஜபக்ஷ தன் வாக்குறுதிகளை நவம்பர் எட்டாம் திகதி தாக்கல் செய்யும் நிதிநிலை அறிக்கையிலேயே அறிவிப்பார்.

தேர்தல் அறிக்கையானது கொள்கைகளை தெரிவிக்கும். நிதிநிலை அறிக்கையானது கொள்கைகளை எப்படிச் செயற்படுத்தப் போகிறோம் என்பதை அறிவிக்கும். எங்களது செயற்திட்டங்களை எதிர்வரும் சனவரி முதல் செயற்படுத்துவோம் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

இந்த ஊடகவியலாளர் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் மங்கள சமரவீர, மகிந்தவின் அதிகாரபூர்வ தேர்தல் அறிக்கை வெளியிடப் பட்டுவிட்டது. சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுடன் மகிந்தவுக்கு எவ்வித முரண்பாடும் இல்லை என்றார்.

இதனிடையே தோட்டத் தொழிலாளர் காங்கிரசின் அதிருப்தி பிரிவைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் கோவிந்தராஜா, பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் ஆகியோர் மகிந்தவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளார்.

தாங்கள் முன்வைத்த 14 நிபந்தனைகளை மகிந்தராஜபக்ஷ ஏற்றுக்கொண்டதால் அவரை ஆதரிப்பதாக அறிவித்துள்ளனர்.

# பிரச்சாரத்திற்கு அரச உடமைகள் பயன்படுத்தப்பட்டால் கடும் நடவடிக்கை

## -சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சுற்றறிக்கை

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்துவோரைக் கைது செய்யவும் வாகனங்களைக் கைப்பற்றவும் நடவடிக்கை எடுக்கப்படும் என சிறிலங்கா பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.இந்த விடயம் தொடர்பான சுற்றறிக்கைகள் பொலிஸ் உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவது தொடர்பாக பொது மக்களிடம் இருந்து அதிகமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளமையால் இவ்வாறான செயற்பாடு ஒன்றை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டதாக பொலிஸ் மா அதிபர் கூறினார்.

தேர்தல்கள் ஆணையாளர் இந்த விடயம் குறித்து பொலிஸ் மா அதிபருக்கு ஏற்கனவே முழுமையாக விளக்கமளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேபோல் தேர்தல் ஆணையாளர் இது குறித்து அரச செயலகங்கள் திணைக்களங்கள் போன்றவற்றின் உயரதிகாரிகளுக்கு அரச வாகனங்களைப்பிரச்சார நடவடிக்கைகளுக்கு வழங்க வேண்டாம் என அறிவுறுத்தி இருந்தார்.

இந்தச்சட்ட திட்டங்களைக் கடைப்பிடிக்கப் படாத பட்சத்தில் அரசியல் அமைப்பில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய செயற்படப் போவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இருந்தும் சில அரச நிறுவனங்களில் பொதுச்சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்து இருந்ததாகத்தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (32)

# மனித உரிமைகள் அலுவலகம் மீதான தாக்குதல் சுதந்திரமான விசாரணைக்கு வலியுறுத்து

## -சிறிலங்கா பொலிசாரில் நம்பிக்கையீனம்

(கொழும்பு)

**சிறிலங்கா மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைமை அலுவலகம் மீதான தாக்குதல் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ள வலியுறுத்தப்பட்டு வருகிறது.**

கடந்த 12ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையக அலுவலகம், தாக்குதலுக்குள்ளானது. அலுவலகத்தில் உள்நுழைந்த குழுவினர் ஆவணங்களை சேதப்படுத்தி தீயிட்டுள்ளனர். பல ஆவணங்களின் மீது மண்ணெய் ஊற்றியுள்ளனர்.

இச்சம்பவத்திற்கு ஆசிய-பசுபிக் பிராந்திய சர்வதேச மன்னிப்புச் சபையின் அதிகாரி நடலிஹில் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுபோன்ற செயல்களை அனுமதிக்கக்கூடாது மனித உரிமைகள் ஆணையம் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் இயங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தச் சம்பவம் தொடர்பாக சுதந்திரமான முறையில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தெற்காசிய மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் நிர்வாகியான தேஜ்சிறி தாப்பாவும் இந்த சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதல் குறித்து பொலிசார் விசாரணைகளைத் தொடங்கியபோதும் சுதந்திரமான விசாரணையை மேற்கொள்ள சிறிலங்கா மனித உரிமைகள் ஆணையமும் வலியுறுத்தி வருகிறது.

# கிராமங்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

## வங்கித் துறையிடம் நிதியமைச்சின் செயலர் கோருகிறார்

இலங்கையின் வங்கி துறையினர் கிராமங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி ஜயசுந்தர தெரிவித்துள்ளார். கிராமங்களின் அபிவிருத்தி குறித்து வர்த்தக வங்கிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இதேவேளை இலங்கையின் வர்த்தக வங்கிகள் உலக வங்கிகளுடன் போட்டியிடக் கூடிய அளவிற்கு செயற்திறனை அதிகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (32)

# நான்கு ஊடக வியலாளர் மீதான விசாரணை பெப்ரவரிக்கு ஒத்திவைப்பு

சண்டேலீடர் ஊடக இதழின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் அந்த இதழின் மூன்று ஊடகவியலாளர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை தொடர்பான விசாரணை எதிர்வரும் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மூன்றாம் திகதி நடத்தப்படவுள்ளது.

இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவை அவமதித்ததாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.2001 ஆம் ஆண்டு குறித்த ஊடக இதழில் எழுதப்பட்ட கட்டுரையின் மூலம் ஆணைக்குழுவுக்கு அவமதிப்பு ஏற்பட்டுள்ளதாகக்கூறி இந்த வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.மனுவில் சண்டேலீடர் ஆசிரியர் மற்றும் ஊடகவியலாளர்களான பெட்ரிகா ஜேம்ஸ், அமந்த பெரேரா ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (32)

## -நிசாம் முத்தலிப்கொலையில்-

# கொலையாளிகளைக் கண்டவர்கள் சாட்சியமளிக்க ஒப்புதல்

(கொழும்பு)

இராணுவப் புலனாய்வுப்பிரிவின் அதிகாரி மேஜர் துவான் நிசாம் முத்தலிப்பின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் பொரல்ல கனத்தை சுற்றுவட்டத்திற்கு அருகில் இருந்து உளவு பார்த்துள்ளமை குறித்துத்தகவல்கள் கிடைத்துள்ளன. இந்தத்தகவலை நேற்றுமுன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இரகசிய பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த வழக்கு நேற்று அழைக்கப்பட்ட போது பொரல்ல கனத்தை சுற்றுவட்டத்திற்கு அருகில் கொலைச் சந்தேகநபர்கள் நடமாடியதைப் பலர் கண்டதாகவும் எனினும் சாட்சி கூற பயந்திருந்ததாகவும் இரகசிய பொலிஸ் மன்றில் தெரிவித்தனர்.

இதேவேளை கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சிற்றூர்ந்து தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாக பொலிசார் குறிப்பிட்டனர்.இந்த நிலையில் சந்தேகநபர்களை எதிர்வரும் 28 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (32)

# பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடுகளால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## -பிரதியமைச்சர் ஜயரத்ன ஹேரத் குற்றச்சாட்டு

பொலிஸ் ஆணைக்குழுவின் வினைத்திறன் அற்ற செயற்பாடுகள் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடக்கூடும் என பிரதியமைச்சர் ஜயரத்ன ஹேரத் தெரிவித்தார். பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ் திணைக்களத்திற்கு தடையாக அமைந்துள்ளதெனவும் அவர் குறிப்பிட்டார். இதன் காரணமாக நாடு முழுவதிலும் உள்ள 102 பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பதிகாரிகளை நியமிக்க முடியாதுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய பொலிஸ் ஆணைக் குழுவினர் அரசியல் தேவைகளுக்கு அமைய செயற்படுவதாக அவர் தெரிவித்தார். நாடு தேர்தல் ஒன்றுக்குத் தயாராகியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்து முழு நாடும் கேள்வி எழுப்பும் நிலை தோன்றியுள்ளதாக பிரதியமைச்சர் ஜயரத்ன ஹேரத் தெரிவித்தார். (32)

# வெளிநாட்டுக் கண்காணிப்பாளர் பிரதேச மையங்களில் கடமை

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடவுள்ள வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் பிரதேச மையங்களில் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டு வருவதாக சுயாதீனமான தேர்தல் கண்காணிப்பு மையமான பவ்ரல் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் சகல வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களும் இலங்கையை வந்தடைவார்கள் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கிங்ஸ்லி ரொட்றிகோ தெரிவித்தார்.

சுமார் நூறு வெளிநாட்டுத்தேர்தல் கண்காணிப்பாளர்கள் கடமையில் ஈடுப்படுத்தப்படவுள்ளதுடன் 22 ஆயிரம் உள்நாட்டு கண்காணிப்பாளர்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கிங்ஸ்லி ரொட்றிகோ குறிப்பிட்டார். (32)

# தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தில் பிளவில்லை மகிந்தவை ஆதரிக்க அறிவு ஜீவிகளை ஒருங்கிணைக்கிறேன்

## -எல்லே குணவன்ச தேரர் கூறுகிறார்

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியை தான் ஆதரிக்கக்கூடும் என்ற தகவல்கள் தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் நிறுவனர் எல்லே குணவன்ச தேரர் விளக்கம் அளித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் பேசிய எல்லே குணவன்ச தேரர் கூறியதாவது;

அநுராதபுரத்தில் சிறிசேன கூரேயை அண்மையில் சந்தித்துப் பேசினேன். அவர் அழைத்ததால் சென்று சந்தித்தேன். அநுராதபுரத்தில் மேற்கொள்ளப்படக் கூடிய சமூக சேவை நிகழ்வுகளில் என்னைப் பங்கெடுத்துக்கொள்ள கேட்டுக்கொண்டார்.

இந்தச் சந்திப்புக்களில் அரசியல் எதுவும் பேசப்படவில்லை. ஆனால் அதைக்காரணம் காட்டி ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபடப்போவதாகக் கூறப்படுவது தவறானது. அரசியல் கட்சியினரும் ஊடகங்களுமே இச்சந்திப்பை திரித்து விட்டன.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தில் பிளவு ஏதும் ஏற்படவாய்ப்பில்லை. நாட்டின் அனைத்து அறிவு ஜீவிகளையும் மகிந்தவுக்கு ஆதரவளிக்கும் வகையில் தற்போது ஒருங்கிணைத்துக்கொண்டிருக்கிறேன் என்றார் எல்லே குணவன்ச தேரர்.

# பேருந்து பள்ளத்தாக்கில் வீழ்ந்தது நுவரெலியாவில் இருவர் பலி!

## - 40 பேர் காயம்

நுவரெலியா கம்பரகலைப்பகுதியில் பேருந்து ஒன்று பள்ளத்தாக்கில் விழுந்ததில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன் நாற்பது பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பில் இருந்து வெலிமடை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது என்று நுவரெலியா பொலிசார் தெரிவித்தனர். நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும், பொலிசார் கூறினர்.

## முஸ்லிம் காங்கிரஸ்-அதிருப்தியாளர் அணி அட்டாளைச் சேனையில் கைகலப்பு

அட்டாளைச் சேனைப் பகுதியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும், அத்தாவுல்லா ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.சனாதிபதித்தேர்தல் பரப்புரைகளுக்காக ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் அட்டாளைச்சேனைக்கு வருகை தருவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அத்தாவுல்லா ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஒரு மணி ஜும்மாத் தொழுகைக்குப் பின்னர் அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசலில் இருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஆரம்பித்தனர். சில நிமிடங்களில் இவர்கள் பிரதான வீதியை அடைந்தவுடன் ரவூப் ஹக்கீமின் ஆதரவாளர்கள் குழுவொன்று இவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இதன்போதும் இருதரப்பும் பரஸ்பரம் கல்வீச்சுகளில் ஈடுபட்டுள்ளனர். அதன்போது அத்தாவுல்லாவின் இணைப்பாளர் உதுமல் லெப்பையின் வாகனமும் அடித்து நொருக்கப்பட்டுள்ளது. இந்தக் கலவரத்தினால் எட்டுப்பேர் காயமடைந்துள்ளனர். நிலைமை மோசமான நிலையை அடையவே அங்கு விரைந்த கலகத்தடுப்புப் பொலிசார் இரண்டு தரப்பினரையும் அடித்து விரட்டி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். இந்தக் கலவரங்களால் தற்போது அப்பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவுகின்றதுடன் பெரும் எண்ணிக்கையிலான பொலிசார் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர்.

## யுத்த நிறுத்த ஒப்பந்தத்தால் சில பகுதிகளுக்கு நானும் சனாதிபதியும் செல்ல முடியாதுள்ளது

### பிரதமர் மகிந்த ஆதங்கம்.

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்தம் காரணமாக இலங்கையின் சில பகுதிகளுக்கு தானும் சனாதிபதியும் செல்ல முடியாதுள்ளதாக பிரதமர் மகிந்தராஜ பக்ஷ கவலைவெளியிட்டுள்ளார்.

தெவினிப்பிட்டியவில் கடந்த வியாழன் அன்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே பிரதமர் மகிந்தராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,இது உண்மையானதொரு சமாதானமல்ல, சனாதிபதித்தேர்தல் நடவடிக்கைகளுக்கு இந்நிலை பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

விடுவிக்கப்படாத பிரதேசம் என்பதன் அர்த்தமென்ன.அந்தப் பிரதேசத்திற்குச் செல்லமுடியாது அப் பிரதேசங்களுக்கு வாக்குப் பெட்டிகளையும் கொண்டு செல்ல முடியாது. ஏன் பொலிசார் கூடச் செல்லமுடியாது. இராணுவத் தினரும் செல்லமுடியாது. இதுவா எமது நாடு. இதுயாருடைய ஒப்பந்தம் இதனை யார் பிரித்தது. இதனையா சமாதானம் என்று கூறுவது.யுத்த நிறுத்தமொன்றுள்ளது. நான் இல்லையென்று கூறவில்லை. உலகில் எங்கு வேண்டுமானாலும் செல்ல முடியும். இலங்கையில் அது முடியாது. வன்னிக்கப்பால் சனாதிபதியாலும் செல்ல முடியாது. இவற்றை மாற்ற வேண்டும். பேச்சுவார்த்தை மூலம் இதனைத் தீர்க்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தை மாற்ற வேண்டும் பேச்சுவார்த்தை மூலம் ஒப்பந்தத்தை மாற்றுவோம் என நாம் கூறும் போது நாம் யுத்தத்திற்குத் தயாராகுவதாகக் கூறுகிறார்கள் என்றார் மகிந்தராஜபக்ஷ.

## ஜே.வி.பிக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

ஜே.வி.பி யினருக்கு எதிராக கொழும்பில்நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றைதேசப்பிரேமி அமைப்பு நடத்தியது.நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்க முடியாத சிறிலங்கா இராணுவத்தைக் கலைக்க வேண்டும் என ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கூறிய கருத்துக்கு எதிர்ப் புத் தெரிவிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு எதிரில் பிற்பகல் 3.30 மணியளவில் நடத்தப்பட்டது. இதன்போது சோமவன்ச அமரசிங்கவின் கொடும்பாவியும் எரியூட்டப்பட்டது. இதேவேளை இராணுவத்தினரையும் பொலிசாரையும் அவமதிப்பது சனநாயக நாடு ஒன்றில் மிகவும் பாரதூரமான செயல் எனவும் தேசப் பிரேமி அமைப்பு சுட்டிக்கட்டியுள்ளது.


## மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

*குவைத், துபாய்,சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் பின்வரும் தொழில் வாய்ப்பு*

| | |
|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | (SECURITY GUARD) |
| வீமான நிலைய பொதி சுமப்பவர் | (PORTER) |
| வீமான நிலைய சுத்திகரிப்பு | (CLEANING WORK) |
| கட்டட தொழிலாளர்கள் | (LABOURER) |
| ஷட்டரீங் வேலை அனுபவம் கொண்டதச்சுத் தொழிலாளர்கள் | (SHUTTERING CAR PENTER) |
| மேசன்மார் | (MASON) |
| மாபிள் கல் பதிக்கும் அனுபவம் வாய்ந்த மேசன்மார் | (MARBLE/TILES MASON) |
| மின் இணைப்பாளர்கள் | (ELECTRICIAN) |
| உருக்குப் பொருத்துநர்கள் | (STEEL FIXER) |
| பிளம்பர்மார் | (PLUMBERS) |
| சுவர்வர்ணம் தீட்டுவோர். | (WALL PAINTER) |

(சி. 13015)

**தொடர்புகளுக்கு**

**RAIN BOW TRAVELS & TOURS**

321/2 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.



## குறைந்த கட்டணத்தில் உங்கள் பயணங்களை இலகுவாக்குங்கள்

MANOJ AIR TOURS (PVT) LTD

கொழும்பு சென்னை இரு வழி 18500/=
பாங்கொக் இருவழி 20500/=
சிங்கபூர் இருவழி 24000/=

பாங்கொக் சிங்கபூரில் சலுகைக் கட்டணத்தில் தங்குமிட வசதிக்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

யாழ். - கொழும்பு இருவழி - 10990/=
யாழ். - கொழும்பு ஒருவழி - 6275/=

MANOJ AIR TOURS (PVT) LTD
32, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்
021 2223916
021 2222007

கொழும்பு
0112390128
0112361660
HOT.LINE 0777517019.

(சி-13036)



## வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்

## பணிநிலை வேண்டுகை

**01. கட்டட வேலை மேற்பார்வையாளர் (ஆண்)**

*தகைமை:-* அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் BCT கற்கைநெறி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

அதற்குச் சமனான தகைமை பெற்றிருத்தலுடன் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

*அகவை:-* 20 - 45 ஆண்டுகள்.

**02.வேலை மேற்பார்வையாளர் (ஆண்)**

*தகைமை:-* க.பொ.த. (சா/த) தேர்வில் கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

அத்துடன்

மேற்பார்வைப் பணி தொடர்பாக மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

*அகவை:-* 20 - 45 ஆண்டுகள்.

**03.களஞ்சியக்காப்பாளர் (ஆண்)**

*தகைமை:-* க.பொ.த. (சா/த) தேர்வில் கணிதம், விஞ்ஞானம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

*அகவை:-* 20 - 45 ஆண்டுகள்.

**04.காவல்கடமையாளர் (ஆண்)**

*தகைமை:-* 8ஆம் தரம் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

*அகவை:-* 30 - 50 ஆண்டுகள்.

➤ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

நேர்முகத் தேர்வு:-

18.10.2005 முதல் 19.10.2005 வரை காலை 09.00மணி முதல் மதியம் 01.00 மணி வரை எமது பணிமனையில் இடம்பெறும். விண்ணப்பதாரர் தமது சுய விபரத்துடனும், ஆவணங்களின் சான்றுகளுடனும் நேரில் சமுகம் தரவும்.

மனிதவள மேலாளர்,
வடகிழக்குக் கட்டுமானத் தொழில்நுட்ப நிறுவனம்,
(NECTEC)
கண்டி வீதி, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி. தொலை பேசி இல. 0212285917

(சி-13037)


## அரசாங்க அறிவித்தல்

யாழ்.மாவட்டச் செயலகம்

குறுகிய கால தொழிற்பயிற்சித்திட்டத்திற்கு உபகரணங்களும் பொருட்களும் வழங்குவதற்கான கேள்வி

யாழ்.மாவட்டத்தில் குறுகிய கால தொழிற்பயிற்சி நெறியினை நடைமுறைப்படுத்துவதற்காக கீழ்வரும் பொருட்கள் வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

இதற்கான விண்ணப்பப்படிவத்தையும், பொருட்கள் தொடர்பான விரிவான விபரங்களையும், நிபந்தனைகளையும் மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் அலுவலக நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப.4.45 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்திசெய்யப்பட்ட படிவத்தை மாவட்டச் செயலர், மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்டு மேலுறையின் இடது பக்க மேல் மூலையில் பயிற்சி நெறிக்கான உபகரணங்களும், பொருட்களும் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் என குறிப்பிட்ட பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலக கேள்விப்பெட்டியிலோ 2005.10.25 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பப்படவேண்டும். அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விப்பத்திரபெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதி ஒருவரோ சமுகமளிக்கலாம்.

1. உருக்கு அலுமாரி
2. உருக்கு எழுதுநர் மேசை
3. தச்சுப் பயிற்சிநெறிக்கான உபகரணங்களும் பொருட்களும்
4. தன்னியக்க இயந்திர பயிற்சிநெறிக்கான உபகரணங்களும் பொருட்களும்
5. தீந்தை வகைகள் (Paint)
6. தும்புக்கைத்தொழில் பயிற்சிநெறிக்கான உபகரணங்களும் பொருட்களும்
7. துணி வகைகள்
8. தூரிகை வகைகள்
9. பூச்சு வகைகள் (Dye)
10. பிளாஸ்ரிக் கதிரைகள்
11. மட்பாண்ட பயிற்சிநெறிக்கான உபகரணங்களும் பொருட்களும்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபரும்,மாவட்ட செயலரும்
யாழ்.மாவட்டம்.

(சி-13038)



# புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ் - 16.10.2005



## தேச நலன் காக்கும் தெய்வமாய் தேரேறி வரும் வல்லிபுர ஆழ்வார்

தமிழீழ மண்ணை அலங்காிக்கின்ற திருக்கோவில்களில் வடமராட்சியில் அமைந்த வல்லிபுரக்கோவில் உன்னதமான ஒரு இடத்தை வகிக்கின்றது. மூர்த்தி, தலம் தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட இவ்வாலயம் யாழ். குடாநாட்டின் வடகீழ்ப்பகுதியை அண்டிய கடற்கரையை தனது தீர்த்தக்கரையாகக்கொண்டு விளங்குகின்றது.


யாழ்ப்பாணக் குடாநாட்டில் வடமராட்சிப்பகுதியில் துன்னாலையில் வல்லிபுர ஆழ்வாராகவும், வலிகாமம் மேற்கிலே பொன்னாலையில் வரதராசப் பெருமாளாகவும், யாழ்ப்பாணத்தில் வண்ணை வெங்கடேசப்பெருமாளாகவும், வலிகாமம் வடக்கில் காங்கேயன் துறையில் ஸ்ரீ கிருஷ்ணனாகவும் நாமம்தாங்கிக் கோவில் கொண்டு எழுந்தருளிஅருள் பாலிக்கின்றார்.

வல்லிபுர ஆழ்வார் வரலாறு செவிவழிவந்த வரலாறாக இன்றும் பேணப்பட்டு வருகின்றது. துன்னாலை வடக்கிலே லவல்லியென்னும் பெயருடைய பெண்ணொருத்தி வாழ்ந்துவந்த இடமே வல்லிபுரம் என் அழைக்கப்படுகின்றது.

இந்நிலையில் மச்ச அவதாரம் தாங்கி விஷ்ணுமூர்த்தியானவர் மிதுரமீனாக எழுந்து துள்ளிப்பாய்ந்து விளையாடினார். அங்கே மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்களின் மனங்களிலே அதிசயத்தை உண்டாக்கினார், அது மட்டுமல்ல அந்த மீனானது மீனவர்களின் வலைகளைக் கிழித்து துள்ளிக்குதித்துக் அங்கும் இங்குமாக பாய்ந்து கொண்டிருந்தது.

இவ் அற்புதத்தை அறிந்த கரையோரப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அனைவரும் அக்கடற்கரைப்பகுதிக்கு சென்றார்கள். மீனின் லீலைகளைக் கண்டு ஆச்சரியத்தில் மூழ்கினார்கள்.

நீண்டநாட்களாக குழந்தைச்செல்வம் இல்லையென்று அக்குறிச்சியில் வருந்தி வாழ்ந்து வந்த லவல்லி இறையருளால் அருந்தவம் மேற்கொண்டு வந்தாள். இவ்வேளையில்தான் நீள்கடலில் அனந்த சயன மூர்த்தியாக பள்ளிகொள்ளும் பரந்தாமன் அர்த்த ராத்திரியில் லவல்லியின் கனவிலே தோன்றி "அலை கடலோரம் வருக நீ நினைத்தது கிடக்கும்" என பணித்து மறைந்தான்.



லவல்லியின் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. பாற்கடலிலே பள்ளிகொள்ளும் பரந்தாமனுடைய வேண்டுதலை ஏற்று லவல்லியும் கடலோரம் வந்தாள் தான் கண்ட கனவுபலிக்கப் போகின்றதேயென நினைத்து நீள் கடலானை மனதில் நினைத்து தியானித்து அமர்ந்தாள்.

கடலிலே திருவிளையாடல்களைப் புரிந்து கொண்டிருந்த அந்த மீனானது துள்ளிப்பாய்ந்து லவல்லியின் மடியில் விழுந்தது. உடனே அது அழகிய திருக்குழந்தையாக உருவெடுத்தது. எல்லோரும் இந்த அற்புதத்தைக் கண்டு மெய்மறந்து நின்றார்கள்.

கண்களைத் திறந்த லவல்லி தன் மடியில் மூர்த்தி திருவிருக்கும் வண்ணம் கண்டாள். அளவிடமுடியாத ஆனந்தத்தோடு அத்திருக்குழந்தையைத் தாலாட்டி சீராட்டுவதை எல்லோரும் கண்டனர்.

லவல்லி ஒரு பல்லக்கினை வரவழைத்தாள். அழகான அக்குழந்தையை அப்பல்லக்கில் வைத்து எடுத்து வரும்படி பணித்தாள். அவ்வாறே பல்லக்கினை எடுத்து வரும் வழியில் பல்லக்கின் பாரம் அதிகாிக்கவே அவ்வெண்மணல் பரப்பில் பல்லக்கினை காவி வந்தவர்கள் வைத்துவிட்டனர். வைத்துவிட்டு அவர்கள் இளைப்பாறினார்கள். அக்கணத்திலே மாயவன், அந்தக் கோபாலன் மாயமாகி மறைந்து அந்தணவடிவத்தில் தோன்றி ஒரு சக்கரத்தைக் கொடுத்து இதனை பூஜித்து வாருங்களெனக் கூறி மறைந்தனன். அந்தச் சக்கரத்தை வைத்து பூஜித்து வந்த இடமே எம்பெருமான் மூலமூர்த்தியாக எழுந்தருளி இன்றும் அருள் பாலித்து வருகின்ற திவ்விய திருத்தலமாக வல்லிபுர ஆழ்வார் திருக்கோவிலாகக் காட்சியளிக்கின்றது.

இத்தகு அற்புத வரலாற்றுச் சிறப்புக்களோடு விளங்கும் ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று ரதோற்சவப் பெருவிழா வெகுவிமர்சையாக பக்திபூர்வமாக நடைபெறுகின்றது. எம்பெருமானின் திருத்தேர் பவனியினைக் காண பல ஊர்களிலிருந்தும் அடியார்கள் ஆலயத்தில் கூடுகின்ற திருக்காட்சியைக் காணலாம்.

திருத்தேரிலே ஆரோகணித்து அபயம் தந்து காக்கின்ற கடவுளாக வல்லிபுர ஆழ்வார் தன்னை நாடிவரும் பக்தர்களை காக்கின்ற தெய்வமாகக் காட்சி தருகின்றார். அந்தத் திருக்காட்சியைக் கண்டு அவனருளுக்கு பாத்திரமாவோமாக.

மதுரகவி காரை.எம்பி. அருளானந்தன் (B.A. HONS)
(ஆசிரியர், யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)


வன்னியில் முதல்தர அரிசி விற்பனையாளர்
**சிவனருட் செல்வன் அரிசி ஆலை**
உருத்திரபுரம் வீதி, (சி-12965) கரடிப்போக்கு கிளிநொச்சி.

அச்சுவேலைகளுக்கு தரமான பதிப்பகம்
**தமிழ்ப் பூங்கா மல்ரி ஓப்செற்பதிப்பகம்**
பிரதான வீதி, (சி-12966) தொ.பேசி 021.2264014 நெல்லியடி.

மின்சார பாவனைப் பொருட்கள்
பாடசாலை உபகரணங்கள் விற்பனையாளர்
**தமிழ்ப் பூங்கா புத்தகசாலை அன் எலற்றிக்கல்ஸ்**
பிரதான வீதி, (சி-12967) தொ.பேசி 021.2263073 நெல்லியடி.

அழகிய நவீன தங்க ஆபரணங்களுக்கு
**ராஜன் ஆபரண மாளிகை**
பிரதான வீதி, (சி-12968) தொ.பேசி 0777-290405 நெல்லியடி.

ஏசியன் கலர் வேள்ட்இன்
அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்
**விண்மீன் அங்காடி**
பிரதான வீதி, (சி-12969) தொ.பேசி. 021-2263027 நெல்லியடி.

கட்டடப்பொருள்கள் விற்பனையாளர்
**வே.மனோகரன்**
மந்திகை, (சி-12970) தொ.பேசி 021.2264192 புலோலி.

உங்கள் தீபாவளிப் பண்டிகையினை எங்களுடன் கொண்டாடுங்கள்!
**குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்**
யாழ்.சாலை, (சி-12971) கிளிநொச்சி.

T.V.S டைடோ, பஜாஜ், உமாசாக்கி ஜெயலிங் உந்துருளிகளின் வன்னி மாவட்ட அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்.
**சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்**
யாழ்.சாலை, பரந்தன், கிளிநொச்சி, தொ.பேசி 021.2285072 (சி-12972)


## ADVANCED FIELD OFFICER for FOOD SECURITY DEVELOPMENT PROGRAMS (JAFFNA)

Action contre la faim is an international NGO involved in humanitarian activities in Srilanka since 1997 Current activities are based in Ampara, Batticaloa, jaffna and Trincomalee districts. For a coming development programme of 2 years we require in jaffna services of a woman as advanced field officer (AFO)

This position is suitable for an economist or an agriculturalist who has strong experience of minimum 2 years in running livelihood programs and who is more than 27 years old.

The woman will be in charge of development programmes mainly in the islands with a targeted gender approach (intiatives with women s group widows) She will manage the collection and analysis of livelihood data the reporting and occasionally the representation at technical meetings in Jaffna She will join a team of 2 AFO s(junior and senior) and will work under the responsibility of the Food Security program Manager in Jaffna

Applicants must be charismattic good in team management fluent in English and able to do conversation in Tamil. Computer literacy especeiall y MS Word and Excel is required.

Category: Senior position
Duratiopn: Iyear with insurance coverage
Apply within as soon as possible
ACF Food Security jop Vacancy
NO 40 Racca Lane
Chundilkuli
Jaffna
T.P 0212222465/0212222465

(சி-13024)


G.C.E. A/L பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் புக முடியாதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

City&Guilds International London (UK)
நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற.

- Telecommunication Systems
- Electrical & Electronic Engineering

ஆகிய துறையில் பொறியியல் வகுப்புகள் கொழும்பில உள்ள APPS International Net Work (PVT) LTD ஆல் நடாத்தப்படுகின்றது.

புதிய பிரிவுகள் ஆரம்பம் 16.10.2005

Note:- Advance Diploma தராதரத்துடன் Charted Engineer, Graduate Diploma நேரடியாகப் பயிலலாம். அத்தோடு London பல்கலைக்கழகங்களில் 2ஆம் வருட அனுமதிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07,பலாலிவீதி,யாழ்ப்பாணம்.
(சி-13021) Regd NO-15251 T.P.021-2223335.

# கிளி.யில் 18 வயதிற்குட்பட்டோருக்கான கராத்தே சுற்றுப் போட்டி





சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு விளையாட்டுத் துறையின் ஆதரவுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபையினர் நடாத்தும் 18 வயதுக்குட்பட்டோருக்கான காரத்தே சுற்றுப் போட்டி நேற்று தூயவன் அரசறிவியல் கல்லூரியில் இடம்பெற்றது.

இப்போட்டியில் காந்தி நிலையம், குருகுலம், செஞ்சோலை, புனிதபூமி, பாரதி, தொழில் கல்வி நிறுவனம், நவஜீவனம், காந்தரூபன் ஆகிய சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குபற்றினர்.

இப்போட்டிக்கு நடுவர்களாக உபாலி சிறிசேன (நான்காவது கறுப்புப் பட்டி, மாத்தறை), நிஷாந்ருபசிங்க (முதலாவது கறுப்புப் பட்டி, கண்டி), ருவான் வணசிங்க (முதலாவது கறுப்புப் பட்டி, கண்டி) ஆகியோர் கடமையாற்றினர்.

## கிளி. மாவ. விளையாட்டு அபி. சங்கத்தால் கழகங்களுக்கு சில அறிவுறுத்தல்கள்

கழகங்களுக்கான சில அறிவுறுத்தல்கள் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தினால் விடுக்கப் பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் கலந்துரையாடலின்போதே இத்தீமானங் கள் நிறைவேற்றப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தலைமையில் தமிழீழ விளையாட்டுத்துறை நடுவப் பணியகத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில் தமிழீழ விளையட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, கிளி. மாவட்ட அபிவிருத்திச் சங்க அதிகாரிகள் மற்றும் கிளி. மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலங்களைச் சேர்ந்த விளை யாட்டு உத்தி யோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் பின்வரு மாறு,

*தமிழீழ விளையாட்டுத்துறையின் கிளி.மாவட்ட அடையாள அட்டைக்கு 22.10.2005 இற்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.

*வி/துறையின் அடையாள அட்டை இல்லாதோர் 01.11.2005 இருந்து எந்தொரு விளையாட்டுப் போட்டியிலும் கலந்து கொள்ள முடியாது.,

* வி.துறையின் அடையாள அட்டைக்கு விண்ணப் பிப்போர். விண்ணப்பித்தோர் குடும்பப்பதிவுஅட்டை சமர்ப்பித்து, வி.'. கழகம் ஊடாக பெற்றுக்கொள்ளவும், கிளி.மா.வி.அ.பி. சபையின் அங்கம் வகிக்காத வி.கழகங்கள் எந்தவொரு போட்டியிலும் பங்குபற்ற முடியாது.

*கிளி/மாவட்டத்தில் உள்ள வி/கழகங்களில் இருந்து விலகியோர். விலத்தப்பட்டோர் ஆறு மாதகாலத்திற்கு எந்தவொரு கழகத்திலும் போட்டிகளிலும் பங்கு பற்ற முடியாது.
(இதுஅங்கத்தவர்கள் விலகும் கழகத்திற்கு கொடுக்கப்படும் கடித திகதியிலிருந்து கணிக்கப்படும்.)

*வி/கழகங்கள் அங்கத்தவர் விலகியமைக்கான கடிதம் கிடைக்கப்பெற்று 15 நாட்களுக்குள் அதற்கான பதிலை அங்கத்தவர்களுக்கும் கிளி/மா/அ/சபைக்கும்,அந்தப் பகுதி வி/உத்தியோகத்தருக்கும் அறிவிக்க வேண்டும்.

*கழகத்தில் இருந்து விலகியவர் கொடுக்கும் கடிதத்தின பிரதிகள் கிளி/மா/அ.சபைக்கும் பிர/வி. உத்தியோகத்தருக்கும் அனுப்பப்படல் வேண்டும்,

*போட்டி நடாத்துகின்ற வி/கழகங்கள் தமது போட்டி அட்டவணைகளை முதலில் கிளி/மா/அ. சபை ஊடாக தமிழீழ விளையாட்டுத்துறைக்கு சமர்ப்பித்து அதில் தெரிவிக்கும் அறிவுறுத்தலை ஏற்றுசெயற்படுத்தவும்.

### விசுவமடு வ.ச. கிரிக்கெட் போட்டி

## விறுவிறுப்புடன் கூடியதான லீக் போட்டிகள்!

விசுவமடு வர்த்தக சங்கம் நடாத்தும் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் நேற்றைய தினம் லீக் முறையிலான ஆறு போட்டிகள் நடைபெற்றன. இதில் சில போட்டிகள் பெரும் விறுவிறுப்பைக் கொண்டவையாக இருந்தன.

விசுவமடு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இளந்தாரகை ஏ விளையாட்டுக்கழகத் திற்கும் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையில் முதலாவது போட்டி நடைபெற்றது. இதில் இளந்தாரகை வி. கழகம் 34 ஓட்டங்களால் உதயசூரியன் வி.கழகத்தை தோற் கடித்தது. இளந்தாரகை - 78/8, உதயசூரியன் - 43.

இரண்டாவதாக நடைபெற்ற போட்டியில் கனகபுரம் வி.கழகமும், பாரதி பி வி. கழகமும் மோதின. இதில் கனகபுரம் வி.கழகம் 61 ஓட்டங்களால் பாரதி பி வி.கழகத்தைத் தோற்கடித்தது. கனகபுரம் - 83/8, பாரதி பி - 24.

மூன்றாவது போட்டியில் இளந்தாரகை ஏ வி.கழகமும், சுப்பராங் வி.கழகமும் மோதின. இதில் இளந்தாரகை வி.கழகம் 40 ஓட்டங்களால் சுப்பராங் வி.கழகத்தை வீழ்த்தியது. இளந்தாரகை 76/7, சுப்பராங் - 36.

அடுத்த போட்டி கனகபுரம் வி.கழகத்திற்கும், நண்பர்கள் வி.கழகத்திற்கும் இடையில் நடைபெற்றது. இதில் கனகபுரம் வி.கழகம் நான்கு ஓட்டங்களினால் வெற்றிபெற்றது. கனகபுரம் - 56/9, நண்பர்கள் -52.

ஐந்தாவதாக நடைபெற்ற போட்டியில் உயதசூரியன் வி.கழகத்திற்கும், சுப்பராங் வி.கழகத்திற்கும் இடையில் நடை பெற்றது. இதில் சுப்பராங் வி.கழகம் மூன்று விக்கெட்டுக்களினால் வெற்றிபெற்றது. உதயசூரியன் - 72/7, சுப்பராங் 75/7.

நேற்று இறுதியாக நடைபெற்ற போட்டியில் தூயதமிழ் வி.கழகத்தை எதிர்த்து புதியதாரகை (நியூஸ்ரார்) வி.கழகம் மோதின. இதில் புதியதாரகை வி.கழகம் ஐந்து விக்கெட்டுக் களால் வெற்றி பெற்றது. தூயதமிழ் - 30, புதியதாரகை - 33/5.

இப்போட்டிக்கு நடுவர்களாக குமார், சுபானந் ஆகியோர் கடமையாற்றினர். இன்றும் போட்டிகள் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கங்குலி ரசிகர்கள் ஆர்ப்பாட்டம்

இந்தியா செல்லும் சிறிலங்கா கிரிக்கெட் அணியுடன் நடைபெறும் ஏழு ஒரு நாள் போட்டிகளில் இரண்டில் பங்கேற்கும் வீரர்கள் விபரம் அறிவிக்கப்பட்ட நிலையில் இவ்வணியில் கங்குலி இடம்பெறாததையிட்டு அவரது ரசிகர்கள் நேற்று முன்தினம் கொல்கொத்தா நகரில் பெரும் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும், தேர்வாளர் குழுத் தலைவரான கிரண்மோரேயின் கொடும்பாவியையும் ஈடன்கார்டன் மைதானத்தில் எரித்துள்ளனர். ஆயினும், இது தொடர்பாக கங்குலி கருத்து எதனையும் கூற மறுத்துள்ளார்.

## ராவிட் நியமனத்திற்குச் சப்பல் வரவேற்பு!



(டில்லி)

சிறிலங்கா மற்றும் தென்னாபிரிக்காவுக்கு எதிராக எதிர்வரும் தொடர்போட்டிகளில் இந்திய அணிக்குத் தலைமை தாங்க ராகுல் ராவிட் நியமிக்கப்பட்டிருப்பதற்கு இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் கிரேக்சப்பல் வரவேற்றுள்ளார்.

சப்பல்கருத்துத் தெரிவிக்கையில், ராவிட் சிறந்த மானோபலமும் அனுபவமும் கொண்டவர் என்று கூறியுள்ளார்.

ராவிட் இந்திய அணிக்கு ஐந்து டெஸ்ட் போட்டிகளுக்கும் 17 ஒருநாட் போட்டிகளிற்கும் தலைமைதாங்கியிருக்கின்றார்.

## தலைவராக நியமிக்கப்பட்டது மிகப்பெரிய கௌரவம் – ராவிட்



இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக நியமிக்கப்பட்டது மிகப் பெரிய கௌரவம் என்று ராவிட் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ராகுல் ராவிட் சிட்னியில் அளித்த பேட்டியில் தெரிவிக்கையில்,

இந்திய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது மிகப் பெரிய கௌரவம் மற்றும் பெருமையாகும். தலைவராகப் பணியாற்றும்படி கேட்டுக்கொண்டது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

அடுத்த வாரம் நாடு திரும்பியதும் பயிற்சியாளர், தேர்வாளர்கள் மற்றும் வீரர்களைச் சந்திக்கவுள்ளேன். சிறிலங்கா அணிக்கு எதிரான [illegible] குறித்து திட்டமிடப்படும்.

இந்திய கிரிக்கெட் சபை உறுப்பினர்களுடன் [illegible] ரிஸ் போட்டியின் இடைவேளையில் [illegible] கொண்டு பேசினேன். அவர்கள் எனக்கு [illegible]த்து தெரிவித்தனர் என்று அவர் கூறியுள்ளார்.



## உலக 11 பேர் அணி நெருக்கடியில் முதல் இனிங்சில் 190 இற்குள் சுருண்டது!

(சிட்னி)

சிட்னியில் நடைபெறும் அவுஸ்திரேலிய உலக பதினொருவர் அணிகளுக்கிடையிலான சுப்பர் சீரிஸ் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது அவுஸ்திரேலியா அதன் இரண்டாவது இனிங்சில் ஒரு விக்கெட்டை இழந்து 66 ஓட்டங்ளைப் பெற்றது.

முன்னதாக நேற்றுக்காலை தனது முதல் இன்னிங்சில் ஆறு விக்கெட்டுக்களுக்கு 331 ஓட்டங்களுடன் தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணி மேலும் 14 ஓட்டங்களைப்பெற்று 345இற்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதனையடுத்து தனது முதல் இனிங்சை ஆரம்பித்த உலக அணி அவுஸ்திரேலியாவின் பந்து வீச்சில் நிலை குலைந்தது. 190 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் அது இழந்தது. அவ் அணியின் இந்திய வீரர் சேவாக் 76 ஓட்டங்களையும், கலிஸ் (தென்னாபிரிக்கா) பிளிண்டொப் (இங்கிலாந்து) ஆகியோர் முறையே அதிக பட்சமாக 44, 35 என்ற ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ராவிட், பவுச்சர் இருவரும் ஓட்டம் பெறாத நிலையில் பார்வையாளர் அரங்கிற்குத் திரும்பினர். பாகிஸ்தானின் இன்சமாம் உல்ஹக் ஒரு ஓட்டத்தையும் லாறா ஐந்து ஓட்டங்களையும், பெற்றனர்.

அவுஸ்திரேலியா சார்பில் பந்துவீச்சில் மக்கில் சிறப்பாக பந்து வீசி 39 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களையும், மெக்ராத் இரண்டு, வோர்ன் மூன்று, பிரெட்லி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் 17 ஓட்டங்களுடனும், கெய்டன் 27 ஓட்டங்களுடனும் களத்தில் நிற்கின்றனர். இன்று மூன்றாம் நாள் ஆகும்.







## கொட்னி வோல்ஷின் சாதனையை மெக்ராத் தாண்டிச் சென்றார்



அவுஸ்திரேலியாவின் பிரபல வேகப்பந்து வீச்சாளரான கிளென் மெக்ராத் நேற்று ராகுல் ராவிட்டின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் கொட்னிவோல்ஷின் 519 விக்கெட்டுக்கள் என்ற சாதனையை சமன் செய்துள்ளதுடன் அடுத்து லாராவின் விக்கெட்டை கைப்பற்றி சாதனையை முறியடித்தார்.

இது தொடர்பாக அவர் கூறும் போது, 600 விக்கட்டுக்களை தாண்டுவதே தனது இலக்கு என்றார். இதேவேளை சுழற்பந்து வீச்சாளர்களான ஷேன்வோன் 626 விக்கெட்டுக் களையும் முரளிதரன் 565 விக்கட்டுக்களையும் வீழ்த்தியுள்ளனர்.

இவர் 1993 ஆம் ஆண்டு நியூசிலாந்துடனான போட்டியில் அறிமுகமாகி இதுவரை 113 டெஸ்ட்போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.



## சிந்தனைக்கு

இலங்கையில் வழக்கில் உள்ள அரசியல் அமைப்பு எப்போதுமே, பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தையே சிறுபான்மையினர் மீது திணித்து வந்திருக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 16.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@yahoo.com

## யார் வரின் என்ன பயன்?

சிறிலங்காவின் அடுத்த சனாதிபதியாக யார் தெரிவு செய்யப்பட்டால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும்?. அன்றி அதுநோக்கி முன்னேற்றம் ஏற்படும் என்ற ஆய்வு பலர் மத்தியிலும் இன்றுமுக்கியமானதொன்றாகியுள்ளது. இது தேர்தலில் வாக்களிக்க விரும்புகின்ற மக்கள் மத்தியிலும் சரி, தேர்தலில் அக்கறையற்றுள்ளவர்கள் மத்தியிலும் சரி கேட்கப்படும், அலசப்படும் ஒன்றாகவேயுள்ளது.

சனாதிபதித் தேர்தலில் 13 வேட்பாளர்கள் போட்டியிடினும் அதில் இரண்டு பிரதான கட்சிகள்/ கூட்டணிகளில் ஏதோ ஒன்றின் வேட்பாளரே வெற்றிபெறுபவர் என்பதில் சந்தேகமில்லை. ஆகையினால், இவ்விரு தரப்பினரதும் இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாடே – எந்தளவிற்கு தீர்வு குறித்து முன்னேற வாய்ப்புண்டு என்பதைவெளிப்படுத்தத்தக்கது. பிரதம வேட்பாளர்களில் ஒருவரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் தாம் யுத்தத்திற்குத் தயாராக இல்லை.தாம் ஒரு யுத்தவிரும்பியும் அல்ல எனக் கூறுவதோடு, இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படும் என்கின்றார். அதேவேளை யுத்தநிறுத்த உடன்பாட்டில் மாற்றம் வேண்டும் எனவும் கூறுகின்றார்.

ஆனால், மகிந்த ராஜபக்ஷ அரசியல்தீர்வு தொடர்பாக பேசி வரினும், அவரின் அரசியல் கூட்டாளிகள் இவ்விடயத்தில் இணக்கப்பாடானதொரு போக்கைக் கொண்டவர்களாக இல்லை. தீவிர வலதுசாரிப் போக்கைக் கைக்கொள்ளும் இக்கூட்டணிக்கட்சியினரில், ஒரு தரப்பினர் பேச்சுவார்த்தைகளையே நிராகரிக்கின்றனர். இன்னொரு தரப்பினர், யுத்தநிறுத்த உடன்பாட்டையே நிராகரிக்கின்றனர்.இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷ இனப்பிரச்சினை விடயத்தில் எவ்வாறு முன்னேறி வரமுடியும்?. சில நோக்கர்கள், தீவிர வலதுசாரிகளின் ஆதரவைப் பெற்று சனாதிபதி ஆகியபின் மகிந்த ராஜபக்ஷ தனது கொள்கைக்கு ஏற்ப ஆட்சி நடத்தலாம் என அபிப்பிராயம் கொண்டுள்ளனர்.

ஆனால், இது நடைமுறையில் சாத்தியப்பாடானதல்ல. ஏனெனில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும், அவர் பாராளுமன்றத்திலும், மாகாண சபைகளிலும் ஜே.வி.பி யையும், ஏனைய தீவிர அடிப்படைவாத சக்திகளையும் நம்பியே இருத்தல் வேண்டும். ஆகையினால், சனாதிபதியாகிய பின்னர் மகிந்த ராஜபக்ஷ தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளலாம் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. ஆகையினால், மகிந்தராஜபக்ஷவினால் இனப்பிரச்சினை விடயத்தில் சிறிதுதானும் முன்னேற முடியுமா? என்பது கேள்விக்குரியதே.

இதேவேளை அடுத்த பிரதான சனாதிபதி வேட்பாளரான ரணில்விக்கிரமசிங்க கடந்தமுறை பிரதமராக இருந்தபோது யுத்தநிறுத்த உடன்பாட்டைச் செய்தவர், ஆறு சுற்றுப் பேச்சுக்கள் ஆயினும் நடத்தியவர், மேலும் பேசுவதற்குத் தயார் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்திவருபவர். ஆகையினால் சமாதான விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க மீது சிறிது நம்பிக்கை உருவாவது தவிர்க்க முடியாததே.


ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் தற்போதைய நிலைப்பாட்டில், பேச்சில் முன்னரில் இருந்து குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தெளிவாகவே தென்படுகின்றன. இவை சமாதானப்பேச்சுவார்த்தை மூலம் தீர்வு என்பதற்கு இடையூறானவையாகவே மதிப்பிடத்தக்கவையாகும் இத்தகைய பேச்சுக்களில் இனப்பிரச்சினைத் தீர்விற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவும் பெறப்படும். தேசிய அரசாங்கம் ஒன்று உருவாக்கப்படலாம். சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுக்கும் அமைச்சரவையில் இடம்ஒதுக்கப்படும் என்பவை முக்கியமானவையாகும்.

ஆனால், அது எந்தளவிற்குச் சாத்தியப்படானது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில் சிறிலங்காவில் சனநாயகம் இன்னமும் அந்தளவிற்கு உயர்ந்த பண்புகளைக் கொண்டதாக மாறவில்லை. எப்பொழுது அடுத்தவரின் காலைவாரலாம் பெரும்பான்மையைத் திரட்டலாம் என்ற நோக்கிலேயே செயற்படுபவையாகவுள்ளன.

அடுத்ததாக ரணில்விக்கிரமசிங்க தமது தீர்வு போன்றவைகள் பேச்சுவார்த்தைகளின் பின்னர் மக்களின் கருத்துக் கணிப்பிற்கு முன்வைக்கப்படும் என்கிறார். அவ்வாறானால் ரணில் விக்கிரமசிங்கவும் தீர்வொன்றைச் சென்றடையாத வகையிலான வழிவகைகளைக் கொண்டுள்ளார். ஏனெனில் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்று இலங்கை தழுவிய கருத்துக்கணிப்பில் வெற்றிபெறும் என எதிர்பார்ப்பது மடத்தனமாகும்.

சுனாமி அனர்த்த மீள் கட்டமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பை விடுதலைப்புலிகளுக்கு தனி அரசைப் பெற்றுக்கொடுக்கும் எனப் பிரச்சாரம் செய்து அதனை முடக்கச் செய்த பேரினவாதிகளுக்கு ரணில் விக்கிரமசிங்கவின் எத்தகைய தீர்வுத் திட்டத்தையும் தோற்கடிக்கும் சக்தியுண்டு.

இந்நிலையில் தற்போதைய அறிவிப்புக்கள் சார்ந்த கொள்கைகளுடன் யார் சனாதிபதியாக வந்தாலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என எதிர்பார்ப்பது அறிவிலித்தனமானதாகவே இருக்கும். ஏனெனில் இவர்களே இனப்பிரச்சினைத் தீர்விற்கான முட்டுக்கட்டைகளையும் பிரயோகிப்புச் செய்பவர்களாகவுள்ளனர்.




## தேர்தல் முடிவு வெளியாகும் முன்னரே சோமவன்ச நாட்டை விட்டு வெளியேறி விடுவார்

### - சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அனுரா

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தைக் கலைத்து விடுமாறு கூறும் ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரே நாட்டைவிட்டு வெளியேறுவது கட்டாயமாக நிகழும் என்று சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தைக் கலைத்து விடுமாறு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறியிருக்கும் கருத்துக்கள் வன்மையாக கண்டிக்கத்தக்கவை.

இராணுவத்தைக் கலைத்து விடுமாறு சோமவன்ச போன்ற கருத்துக்களைக் கூறுபவர்கள் தேர்தல் முடிவுகள் வெளிவருவதற்கு முன்னரே நாட்டைவிட்டு வெளியேறுவது கட்டாயமாக நிகழும்.

மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் அடங்கியிருக்கும் அனைத்து விடயங்களும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளுடன் நூறு சதவீதம் ஒத்துப்போக வேண்டும்.

வேட்பாளரென்ற வகையில் ஏனைய கட்சிகளுடன் உடன்படிக்கையை ஏற்படுத்தும் உரிமை அவருக்கு உள்ளது.எனினும் கட்சியின் கொள்கைகளை காட்டிக் கொடுக்கும் உரிமை அவருக்கு இல்லை.

ஒவ்வொரு கட்சிகளுடனும் உடன்படிக்கை செய்து கொண்டதன் பலன் என்ன என்பதை நவம்பர் மாதம் 18 ஆம் திகதியளவில் மகிந்த ராஜபக்ஷவினால் அறிந்து கொள்ள முடியும் என்றார் அனுரா.

## மாரவிலவில்கண்டுபிடிக்கப்பட்ட சினைப்பரே கதிர்காமரின் கொலைக்கு பயன்படுத்தப்பட்டது

### - விசேட அதிரடிப்படை பிரதி பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

மாரவில பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களில் இருந்த சினைப்பரே முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரைக் கொலை செய்ய பயன்படுத்தப்பட்டது. என்று விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த பிரதி பொலிஸ் மா அதிபர் நிமல்லெவ்கே தெரி வித்துள்ளார்.

மாரவிலவில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படை நிபுணர்களினால் சோதிக்கப்பட்டது. அப்போது இந்த ஆயுதம் சம்பந்தமாக பல முக்கிய தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

இதுசீனாவில் தயாரிக்கப்பட்ட ரி-85 ரக தன்னியக்க துப்பாக்கியாகும். வெடிச்சத்தம் வெளியே கேட்காதவாறு அதற்கு சைலன்சர் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இந்த ஆயுதத்தில் பொருத்தப்பட்டிருந்த தொலை நோக்கிக் கருவி அமெரிக்கத் தயாரிப்பாகும். அதில் இலக்கைக் குறித்துக் கொள்ளும் சிவப்புப் புள்ளியும் உள்ளது. இந்த துப்பாக்கியில் 30 தோட்டங்களைக்கொண்ட தோட்டாக்கள் தொகுதியொன்றைப் பயன்படுத்த முடியும். அதில் இருந்தவை 83 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட தோட்டாக்களாகும்.

இது உண்மையான சினைப்பர் அல்லவென்றும் அதுவொரு தன்னியக்கத் துப்பாக்கியென்றும் விசேட அதிரடிப்படை தெரிவிக்கின்றது. தொலை நோக்கியொன்றைப் பொருத்திஅதனை சினைப்பர் துப்பாக்கியின் வடிவமைத்திருப்பதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் வெளிவிகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதமும் சைலன்சர் பொருத்தப்பட்ட சீனத் தயாரிப்பு தன்னியக்க துப்பாக்கியே எனஅரச இரசாயன பகுப்பாய்வுத்தகவல்கள் தெரிவித்திருந்தன.

துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்ட இடத்திலிருந்து வெற்றுத்தோட்டாக்களை பொலிசார் கண்டுபிடித்தனர். அவற்றிலும் அந்தக் கொலைக்கென பயன்படுத்தப்பட்டவை 83 ஆம் ஆண்டுத் தயாரிப்பான தோட்டாக்களே எனத் தெரியவந்திருந்தன.

இந்தத் தோட்டாக்களும் மாரவிலவில் கண்டுபிடிக்கப்பட்ட தோட்டாக்களும் ஒன்றுக்கு ஒன்று ஒத்துப்போவதாக விசேட அதிரடிப்படையினின்லும்பசட்டவிசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மாரவிலவில் கண்டுபிடிக்கப்பட்ட சினைப்பருடன் அதற்குப் பயன்படுத்தப்படும் மூன்று தோட்டாக்கள் தொகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டன.அந்த தோட்டாத் தொகுதிகளில் 83 தோட்டாக்கள் இருந்துள்ளன.இங்குகண்டுபிடிக்கப்பட்ட வற்றுள் இரண்டு தோட்டாத் தொகுதிகளில் தலா 30 தோட்டாக்கள் வீதமும் மற்றதில் 23 தோட்டாக்களும் இருந்துள்ளன.

கதிர்காமரைக் கொலை செய்த கொலையாளி அவரை இலக்கு வைத்து ஏழு முறை துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. மாரவிலவில் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படுத்தும் தோட்டாத் தொகுதியில் ஏழு தோட்டாக்கள் குறைவாக இருந்துள்ளன. என அவர் தெரிவித்தார்.

## சிறிலங்கா மின்சார சபைக்கு நாளொன்றுக்கு 4 கோடி 5 இலட்சம் நட்டம்

மின் பாவனையாளர்கள் ஒருநாளைக்கு ஒரு கோடி 50 இலட்ச மின் அலகுகளைப் பயன்படுத்துவதாகவும் தற்போது அந்த ஒவ்வொரு அலகிற்கும் மூன்று ரூபா நட்டம் ஏற்படுவதாகவும் இதற்கமைய மின் விநியோகத்தினால் ஒரு நாளைக்கு மின்சார சபைக்கு நான்கு கோடி ஐந்து இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுவதாகவும் மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரச வங்கிகளுக்கும்,இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திற்கும், தனியார் மின்னுற்பத்தி நிறுவனங்களுக்கும் 1,301 கோடி ரூபாவை கடனாக செலுத்தவேண்டியிருக்கும் நிலையிலேயே தனது ஊழியர்களுக்கு 60 கோடி ரூபாவை போனஸாக வழங்க மின்சார சபை தயாராகிறது.

மின்சாரசபை அரச வங்கிகளுக்கு 920 கோடி ரூபாவையும்இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 354 கோடி ரூபாவையும், தனியார் மின்னுற்பத்தி நிறுவனங்களுக்கு 27 கோடி ரூபாவையும்செலுத்த வேண்டியுள்ளது.

வருடாந்த போனஸ் கொடுப்பனவாக 30 கோடி ரூபாவையும் சுகவீன விடுமுறைகளைப் பெற்றுக்கொள்ளாமைக்காக மேலும் 30 கோடி ரூபாவையும் வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாத சம்பளத்துடன் 2003 ஆம் வருட சம்பள அதிகரிப்பு நிலுவை பணத்தையும்சேர்த்து ஒரு ஊழியருக்கு 20,ஆயிரம் என்ற வகையில்அனைத்து ஊழியர்களுக்கும்27கோடி ரூபாவை மின்சார சபை செலுத்தியிருப்பதாகவும் மின்சார சபை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.





நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற உளநலதின நிகழ்வுகள்

# கிளிநொச்சியில் சிறப்புற நடைபெற்ற உலக உளநலதின நிகழ்வுகள்

(அலுவலக செய்தியாளர்)

உலக உளநலதினநிகழ்வுகள் கிளிநொச்சியில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

உளரீதியாக பாதிப்புற்றவர்களின் திறமைகளையும் சமூகத்திலிருந்து அவர்கள் வேறுபட்டவர்களல்ல என்பதையும் வெளிக்கொணரும் முகமாக முன்னெடுக்கப்படும் உலக உளநல நாள் கடந்த 10 ஆம் திகதியாக அமைந்திருப்பினும் கிளிநொச்சியில் 15 ஆம் திகதி கொண்டாடுவதென ஏற்கனவே திட்டமிட்டதற்கமைவாக நேற்று முற்பகல் 9.00 மணிக்கு கிளிநொச்சி பொது மைதானத்தில் உளநல பாதிப்புற்றவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுடன் ஆரம்பமானது.

இந்நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாகப் பொதுச்சுடரினை அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தைச் சேர்ந்த மூன்று மாவீரர்களின் தந்தையாரான மாணிக்கம். எல்லைப் படை மாவீரரின் மனைவியான அருள்மேரி, அன்னை இல்ல உளநல ஆலோசகர் கலியுகவரதன் ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியைத் தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றினார்.

தொடர்ந்து கிளிநொச்சியில் அமைந்துள்ள உளநல பாதிப்புற்றவர்களின் பராமரிப்பு இல்லங்களான, வெற்றிமனை, சந்தோசம் இல்லம், நிறைமதி இல்லம், கருணா நிலையம், அவற்றோடு அன்புச் சோலை மூதாளர் பேணலகத்தினரும் இணைக்கப்பட்டு பல விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. இதில் பயனாளிகள் அனைவரும் பங்குகொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தியதோடு மிகத் திறமையாக விளையாட்டு விதிமுறைகளுக்கமைவாக பல்வேறு விளையாட்டுக்களிலும் பங்குபற்றினர்.

தொடர்ந்து பிற்பகல் 4.00 மணியளவில் கிளிநொச்சி கருணா நிலையத்தில் அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன.

இந்நிகழ்வில் உளநலம் குன்றியவர்கள் பல கலைநிகழ்வுகளில் மிகத் திறமையாக பங்குபற்றினர். நடனம், வில்லுப்பாட்டு. கவிதை, பாடல், நாடகம் போன்ற பல கலை நிகழ்வுகளிலும் பங்குபற்றினர்.

கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவர் யூடி ரமேஸின் தலைமையில்உளநலப் பாதிப்புற்றோர் பராமரிப்பு இல்லங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து நடாத்திய இந்நிகழ்வில் உரைகளை யூடிரமேஸ், பேராசிரியர் தாயாசோமசுந்தரம் மற்றும் பெண்கள் புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி தமிழ்அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி உட்படபலர் நிகழ்த்தினர்.

பெண்கள்புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரால் உளநல பாதிப்புற்றோர் இல்லங் களுக்கான பரிசில்களும் அந்நிறு வனப்பணிப்பாளரால்வழங்கப்பட்டன. இந் நிகழ்வுகளில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர், அன்னை இல்ல இயக்குநர், மற்றும்அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், தமிழீழ மகளிர் பணிமனை துணைப் பொறுப்பாளர், போராளிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் உளநல பாதிப்புற்ற வர்களால் உருவாக்கப்பட்ட கலைப் பொருட்களும் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன.

(லோ,ச)

# "மகிந்த சிந்தனைகள்" இன்று வெளியீடு

சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியிடப்படவுள்ளது.

மகிந்த சிந்தனைகள் என்ற பெயரில் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுபவேளையில் வெளியிடப்படும் தேர்தல் விஞ்ஞாபனம் பிரதமருக்கு ஆதரவு வழங்கும் கட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் 18 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் வைபரீதியாக இந்த விஞ்ஞாபனம் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விபரம்

(நமது நிருபர்)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மேலும் சில பாடசாலை மாணவர்களின் விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

மு/கலைமகள் வித்தியாலயம் ம.கீத்தனா, ஸ்ரீ. விதுர்சனா, தே. தேவிகா, அ. அனுசன்,மு/குமுளமுனை மகாவித்தியாலயம் வே.துஷாதரன், ப. திரசௌபதா, சி.சுரேஞ்சன், மு/அளம்பில் றோ.க. பாடசாலை கு. கிளின்டன்.

மு/கொக்கிளாய் அ.த.க. பாடசாலைக.ஜெனதீபன் மு/செம்மலை மகாவித்தியாலயம் யோ.பிரசாந்த்

மு/இரணைப்பாலை மகாவித்தியாலயம் வி. கலிம்ஸ்ராஜ், யூ..கஜேந்திரராசா.

மு/முல்லைத்தீவு றோ.க. பாடசாலை யே. மேரிகீர்த்திஜா.

மு/வற்றாப்பளை மகாவித்தியாலயம் சி. அனுசாந். மு சிறி சுப்பிரமணியம் வித்தியாலயம் இ.புவிகரன், து.விதுசன்,சோ.டொறின் சாம்பவி,சி. அசானி, செ. செந்துஜா, டே.அகல்ஜா, சி.சுபநிலா.மன்னார் புனித சபேரியார் பெண்கள்கல்லூரி தவபாக்கியம் மிதுசா, சுரேக்கா மேரி.

## திருமலையில்...

பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கம் நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். திருமலையில் தமிழ்தேசிய எழுச்சிநாள் நிகழ்வு நடத்தப்படுவதைக் குழப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்செயல்களில் ஈடுபடும் விஷமத்தனமான சக்திகளுக்கு நாம் இடம்கொடுக்கக் கூடாது.வதந்திகளுக்கு இடம் கொடுக்காது, ஒக்ரோபர் 22 இல் தமிழ்தேசிய எழுச்சிநாளை சிறப்பாக வெற்றிகரமாக நடத்துவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்" என்று பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் கருத்தரங்கில் பங்குபற்றியவர்களைக் கேட்டுக்கொண்டார். "யுத்தநிறுத்த உடன படிக்கையின் பிரகாரம் தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாசை களைப் பூர்த்தி செய்யக் கூடியதான நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும். அவ்வாறு தரப்பட முடியாதவிடத்து, சர்வதேசசமூகம்தமிழ் பேசும் மக்களின்சுயநிர்ணயஉரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத் தவே தமிழ் தேசிய எழுச்சிநாள் நடத்தப்படுகிறது. நிகழ்வின் வெற்றிக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று இரா. சம்பந்தன் தனது பேச்சில் தெரிவித்தார். (25)

## பேச்சு...

ஹொவ்டே கடந்த சில தினங்களுக்கு முன் கிளிநொச்சியில் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தினார். இதன் தொடர்ச்சியாக, பேச்சுக்களை கூடியளவு விரைவாக ஆரம்பிக்கும் நோக்குடன் அதற்கான இடத்தைத் தெரிவு செய்வதில் நோர்வே விசேட தூதுவர் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்...

கொலைகளினால் கேள்விக் குறியாகியுள்ளன.இச்செயலானது மீண்டும் ஒருயுத்தத்தை தமிழ்மக்கள்மீது திணிக்கின்ற செயலாகவே நாம் கருதுகின்றோம். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் சிறந்த கல்விமானாகவும் தேசப்பற்றுள்ள வராகவும் திகழ்ந்தார். பொதுவாழ்வில் தூய்மை யைக் கடைப்பிடித்துதான் சார்ந்திருந்தஅமைப்புக்களின் வளர்ச்சிக்காக பாடுபட்டார். இந்த கல்வி மான்களின் கொலை எமது நாட்டிற்கு ஏற்பட்டபேரிழப்பாகும் எனஅதில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## போர்....

சிறிலங்கா அரசு விடுதலைப்புலிகள் என இரண்டு தரப்புமே ஒரு மறைமுக யுத்தத்தில் ஈடுபட்டு வருவதாகக்கூறினார்.

தற்போது இங்கு இடம்பெற்றுக் கொண்டிருப்பது ஒரு மறைமுகயுத்தம் இராணுவ வரலாறுகளில் இருந்து நாம் அதனைத் தெரிந்துகொண்டுள்ளோம். இது ஒன்றும் புதிதல்ல இரண்டு தரப்புமே இதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. கொலைகள் என்பது யுத்தநிறுத்த மீறல்கள் மட்டுமல்ல அவையொரு யுத்தத்தின்செயற்பாடுகளே. ஒரு யுத்தத்தின்சாதாரண செயற்பாடுகளாகவே இவற்றை நாம்அறிந்து வருகின்றோம் இவை மிகவும் அபாயகரமானவை என்பதனாலேயேதான் நோர்வேஅனுசரணையாளராகிய நாம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை காப்பாற்றும் செயற்பாட்டில் மிகவும் தீவிரமாக இறங்கியிருக்கிறோம் எனவும் டொன்வ்புறாவ் ஹொவ்டே தெரிவித்தார்.

இம்முறை விஜயத்தின்போது இரு தரப்பினரையும் சந்தித்துள்ளீர்கள் சமாதானத்தை அடைவது குறித்து இருதரப்பினரது உண்மையான நிலைப்பாடு என்ன என நீங்கள் கருதுகிறீர்கள் எனக் கேட்டதற்கு, உண்மை யிலேயே சமாதானத்தை அடையவேண்டும் என்று இரண்டு தரப்பும்மிகவும் உண்மை யாகவே விரும்புகின்றன. அதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. ஆனால் அவற்றின் வழி முறைகளைக் கண்டறிவது முன்னெடுப்பது என்பது இரு தரப்பின் கைகளில்தான் தங்கி யுள்ளது. எம்மால் அனுசரணைப் பணிகளையும் சில ஆலோசனைகளையும் வழங்கமுடியுமே தவிர சமாதானத்தை உருவாக்கும்பொறுப்பு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தான் தங்கியிருக்கிறது எனவும்கூறினார் டொன்ட்புறாவ் ஹொவ்டே.

## மீண்டும்...

மார்ட்டினை நாம் சந்தித்துப்பேசினோம். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் நடைபெறுகின்ற மனிதஉரிமை மீறல்கள் குறித்து இயன்மார்ட்டி னிடம் விளக்கினோம்.

இதே மனிதஉரிமை மீறல்கள் தற்போது வடமாகாணத்துக்கும் கொண்டுசெல்லப் பட்டுள்ளதை சுட்டிக்காட்டினோம். மட்டக்களப்பில் நடைபெற்ற கடந்த கால மனித உரிமை மீறல்களும் இயன்மார்ட்டினிடம் விளக்கப் பட்டது.

1990 ஆம்ஆண்டு யூன் மாதத்திற்குப் பின்னர் மட்டக்களப்பில் ஏழாயிரம் பேருக்கு அதிகமானோர் காணாமல்போயுள்ளனர் என்பதையும் பலரை ஒரே இடத்தில் வைத்து கொலை செய்து புதைத்த கொக்கட்டிச்சோலை படுகொலை, மயிலந்தனை கொலைகள், சத்துருக் கொண்டான் கொலைகள் ஆகியவற்றைசுட்டிக் காட்டினோம்.

இச் சம்பவங்கள் நடைபெற்று15 ஆண்டு காலமாகியும் இந்த விடயங்களில் எதுவித நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தோம். தற்போது மீண்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓராண்டு காலமாக மனிதஉரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன. இதைத்தடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்துவிவாதித்தோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள், பொதுமக்கள்,பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எனப் பலதரப்பினரும் சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில்தான் கொல்லப்பட்டு வருகின்றனர். இவற்றைக் கட்டுப்படுத்தவேண்டியது அரசின் பொறுப்பு. எனவே இக் கொலைகளை தடுத்து நிறுத்துமாறு சிறிலங்கா அரசிடம் தெரிவிக்க கூறினோம் என்றும்அவர் கூறினார்.

## யுத்தநிறுத்தத்தை...

பானுவை இலக்கு வைத்து கடந்த 10 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் வாகனத் தொடரணி மீது சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் ஆயுதக் குழுவினர் நடத்திய தாக்குதல், மட்டக்களப்பு மயிலவெட்டுவான் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகளின் தேசிய துணைப்படைவீரர் ஒருவர் [illegible] ன தாக்குதல், யாழ்ப்பாணத்தில் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் கல்வியாளர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தக் கடிதம் அனுப்பப்படுகிறது.

வவுணதீவு தாக்குதலுக்குப் பின் சிறிலங்கா அரச ஊடகங்கள் கேணல். பானுகொல்லப்பட்டார் என்று உடனடியாக பாரியளவில் பரப்புரை செய்தன. சிறிலங்கா இராணுவத்தின் சதித்திட்டமும் தொடர்பும் இத்தாக்குதலில் இருப்பதை இது நேரடியாகச் சுட்டிக்காட்டுகின்றது.

போர்நிறுத்தஉடன்படிக்கையை முழுமையாகப் பாதுகாக்க நாம் எவ்வாறு கடுமையாகப்பாடுபட்டாலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும், சமாதான நடவடிக்கைகளையும் சீர்குலைக்கும் நோக்குடன் நிலைமைகளைச் சிறிலங்கா அரசு கையாளுகின்றது என்பதையே இவை எடுத்துக்காட்டுகின்றன.

இது போன்ற செயற்பாடுகளால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உருவாக்கப் பட்டதன் நோக்கம் பாழடிக்கப்படும்.

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கின்ற முழுப் பொறுப்பும் சிறிலங்கா அரசுக்குத்தான் உண்டு. போர்நிறுத்த உடன்படிக்கையை சிறிலங்கா இராணுவம் சிதைத்து வருகிறது என்பதை சிறிலங்கா அரசுக்கு உணர்த்துவதற்கு கண்காணிப்புக் குழு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிகளில் வாழும் தமிழ் மக்களைப் பாதிக்கும் இத்தகைய வன்முறைகள் அதிகரித்து வருவது எமக்கு கவலை அளிக்கிறது என்று அதில் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.